கிறிஸ்துவே என் வாழ்க்கையின் வெற்றி

Prof. C.S. கிறிஸ்டோபர்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

கிறிஸ்துவே
என் வாழ்க்கையின் வெற்றி

Prof. C. S. கிறிஸ்டோபர்
48-E/1-A, அம்பை ரோடு,
சேவியர் காலனி,
திருநெல்வேலி, தென்இந்தியா-627 005.
தொலைபேசி : 0462-2352052
செல் : 94436 15142

ஆசிரியரிடமிருந்து ....

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே, இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினால் உங்களை அன்போடு வாழ்த்துகிறேன். இப்புத்தகம் கர்த்தருடைய தீர்க்கதரிசனத்தின் தூண்டுதலால் எழுதப்பட்டது. கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரி திருமதி. **தீபா செண்பகராமன்** அவர்கள் எனக்காக ஜெபிக்கும்பொழுது, **“கிறிஸ்துவே என் வாழ்க்கையின் வெற்றி”** என்ற புத்தகத்தை எழுத கர்த்தர் எனக்குக் கட்டளையிட்டார்.

இவ்வுலகில் அநேகர் தாங்கள் வெற்றியான வாழ்க்கை வாழவேண்டும் என விரும்பினாலும் தங்கள் வாழ்க்கையில் தோல்விகளையே சந்தித்து மனமுறிவோடு வாழ்வதையே காண்கிறோம். தேவனாகிய கர்த்தர் அனைவருடைய வாழ்க்கையிலும் எல்லா சம்பவங்களையும் வெற்றியாக்கித் தர வல்லவராயிருக்கிறார் என்பதை இப்புத்தகம் எடுத்துக் காட்டுகிறது. விசுவாசத்தோடு இப்புத்தகத்தை படியுங்கள். கிறிஸ்து உங்கள் வாழ்க்கையில் நிச்சயமாய் வெற்றியாக்கித் தருவார்.

இப்புத்தகம் எழுதுவதற்கு மிகவும் உதவியாயிருந்த சகோ. **மனுவேல்** அவர்களுக்கும், இப்புத்தகம் வெளியீடு தொடர்பாக உதவிசெய்த சகோ. **S. தங்கரத்தினம்** அவர்களுக்கும், சகோ. **S.P.M. மனோகர்** அவர்களுக்கும், எனது மகள் **C. சுகன்யா ஜோசப்** அவர்களுக்கும், எனது மனைவி திருமதி. **Dr. பிரேமா கிறிஸ்டோபர்** அவர்களுக்கும் நன்றியையும் வாழ்த்துதலையும் தெரிவிக்கிறேன். இப்புத்தகத்தை சிறந்த முறையில் அச்சிட உதவிய MATRIX நிறுவனத்துக்கும் என் இதயம் நிறைந்த நன்றியையும் வாழ்த்துதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இவர்கள் ஒவ்வொருவரையும், படிக்கிற உங்கள் ஒவ்வொருவரையும், கிறிஸ்துவுக்குள் வெற்றியான வாழ்க்கையைத் தந்து அவருடைய வெற்றியின் சாட்சியாய் நிறுத்தி ஆசீர்வதிப்பாராக.

இப்படிக்கு,
கிறிஸ்துவின் பணியில்,
சகோ. **C. S. கிறிஸ்டோபர்**

1. முன் குறித்த தேவன்

முன்னுரை :

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்கு வாழ்த்துதல் கூறுகிறேன். தேவனாகிய கிறிஸ்து இயேசுவே ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையில் வெற்றிபெறச் செய்கிறார். ஆனால் மனிதர்கள் தங்கள் வாழ்க்கையில் வெற்றிபெற பல முயற்சிகளைச் செய்கிறார்கள். சிலர் நல்ல வழிகள் மூலமாகவும், சிலர் தீய வழிகள் மூலமாகவும், முயற்சிக்கிறார்கள். இதில் ஒருசிலரே வாழ்க்கையில் உயர்வைக் காணுகிறார்கள். அதுவும் அது தற்காலிக வெற்றியாய்க் காணப்படுகிறது. தேவனாகிய கர்த்தர் ஒருவரே ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையிலும் நிலையான வெற்றியைத் தருகிறார். இதை ருசித்த பவுல்,

“கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப் பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்” (2கொரி. 2:14) என மகிழ்ந்தார்.

<u>எவ்வாறு கர்த்தர் அந்த வெற்றியைத் தருகிறார்?</u>

முதலாவது, தேவனாகிய இயேசுகிறிஸ்து நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நம் வெற்றியை முன்குறித்து வைத்திருக்கிறார்.

“மனுஷ ஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்”. (அப். 17:26).

“தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேரானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்குறித்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்”. (ரோமர் 8: 29).

ஆகவே இவ்வசனங்களின்படி தேவனாகிய கிறிஸ்து நாம் ஒவ்வொருவரும் தாயின் கர்ப்பத்தில் பிறப்பதற்கு முன்பாக நம்மை முன்குறித்திருக்கிறார்.

ஈசாக்கின் வாழ்க்கையைப் பாருங்கள். ஈசாக்கு பிறப்பதற்கு முன்பாக தேவனாகிய கர்த்தர் அவனை முன் குறித்தார். ஆபிரகாம் 75 வயதாயிருக்கும் பொழுது கர்த்தர் அவனுக்கு வாக்களித்தார். ஆபிரகாம் 99 வயதாயிருக்கும் பொழுது பின்னும் தேவன் ஆபிரகாமை நோக்கி : "உன் மனைவி சாராயை இனி சாராய் என்று அழையாதிருப்பாயாக; சாராள் என்பது அவளுக்கு பேராயிருக்கும்". "நான் அவளை ஆசீர்வதித்து, அவளாலே உனக்கு ஒரு குமாரனையும் தருவேன்; அவள் ஜாதிகளுக்குத் தாயாகவும் அவளாலே ஜாதிகளின் ராஜாக்கள் உண்டாகவும் அவளை ஆசீர்வதிப்பேன்" என்றார்.

அ) ந) நகைத்த ஆபிரகாம்

"அப்பொழுது ஆபிரகாம் முகங்குப்புற விழுந்து நகைத்து : நூறு வயதானவனுக்கு பிள்ளை பிறக்குமோ? தொண்ணூறு வயதான சாராள் பிள்ளை பெறுவாளோ? என்று தன் இருதயத்திலே சொல்லிக் கொண்டு", "இஸ்மவேல் உமக்கு முன்பாக பிழைப்பானாக! என்று ஆபிரகாம் தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணினான்.

"அப்பொழுது தேவன்: உன் மனைவியாகிய சாராள் நிச்சயமாய் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு ஈசாக்கு என்று பேரிடுவாயாக; என் உடன்படிக்கையை அவனுக்கும் அவனுக்குப் பின்வரும் அவன் சந்ததிக்கும் நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன் (ஆதி 17:15-19) என்றார். இவ்வாறு ஈசாக்கு பிறப்பதற்கு முன்பே கர்த்தர் அவனை முன்குறித்து வைத்து, ஆபிரகாமுக்கு வாக்களித்து வாக்குத்தத்தத்தைப் பெற்று 25 ஆண்டுகாலம் விசுவாசித்து நடந்த ஆபிரகாம் தனது நூறாவது வயதிலே ஏற்கனவே தான் பெற்ற வாக்குத்தத்தத்தை விசுவாசிப்பதில் தள்ளாடினான். ஆகவேதான் அவன் முகங்குப்புற விழுந்து நகைத்து இஸ்மவேல் பிழைப்பானாக என்றான். தேவனாகிய கர்த்தரோ அவர் வாக்குத்தத்தம் பண்ணி முன்குறித்ததின்படி நிச்சயமாய் உன் மனைவி சாராள் ஒரு குமாரனைப் பெறுவாள் என்று சொன்னது மாத்திரமல்ல அவனுக்கு ஈசாக்கு என்று பேரிடுவாயாக என்று உரைத்து முன்குறித்ததில் விசுவாசம் வைக்கும்படி ஆபிரகாமுக்குள் விசுவாசத்தை ஊட்டினார். மேலும் அவனையும்

அவன் சந்ததியையும் ஆசீர்வதிக்கப் போவதை உடன்படிக்கை யின் மூலம் வெளிப்படுத்தினார்.

யோவான்ஸ்நானனின் வாழ்க்கையைப் பாருங்கள். யோவன்ஸ்நானன் பிறப்பதற்கு முன்பாக தேவனாகிய கர்த்தர் ஒரு தூதனை அனுப்பி அவனுடைய தகப்பனாகிய சகரியாவிடம் "சகரியாவே பயப்படாதே, உன் வேண்டுதல் கேட்கப்பட்டது; உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக".

"உனக்கு சந்தோஷமும் மகிழ்ச்சியும் உண்டாகும் அவன் பிறப்பினிமித்தம் அநேகர் சந்தோஷப்படுவார்கள்".

"அவன் கர்த்தருக்கு முன்பாகப் பெரியவனா யிருப்பான், திராட்சரசமும் மதுவும் குடியான், தன் தாயின் வயிற்றிலிருக்கும்போதே பரிசுத்த ஆவியினால் நிரப்பப் பட்டிருப்பான்".

"அவன் இஸ்ரவேல் சந்ததியாரில் அநேகரை அவர்கள் தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திருப்புவான்".

"பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளிடத் திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி, உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன்னே நடப்பான்". (லூக்கா 1 : 13-17)

தேவனாகிய கர்த்தர்ஆசாரியனாகிய சகரியாவுக்கு தான் முன்குறித்து வைத்த அவனுடைய மகனாகிய யோவான் ஸ்நானனின் பிறப்பையும், அவன் செயல்களையும் காபிரியேல் தேவதூதன் மூலமாய் அவனுக்கு வெளிப்படுத்திக் காட்டினான்.

(ஆ) முன்குறித்ததை விசுவாசியாத சகரியா :

"அப்பொழுது சகரியா தேவதூதனை நோக்கி : இதை நான் எதினால் அறிவேன்; நான் கிழவனாயிருக்கிறேன், என் மனைவியும் வயது சென்றவளாயிருக்கிறாளே" என்றான்.

"இதோ, தகுந்த காலத்திலே நிறைவேறப்போகிற என் வார்த்தைகளை நீ விசுவாசியாதபடியினால் இவைகள்

சம்பவிக்கும் நாள்மட்டும் நீ பேசக்கூடாமல் ஊமையாயிருப்பாய்" என்றான். (லூக்கா 1: 18, 20)

பிரியமான சகோதர சகோதரிகளே தேவனாகிய கர்த்தர் முன்குறித்ததை விசுவாசிக்க வேண்டும். சகரியா விசுவாசியாமல் போனதால் அவன் ஊமையனானான். அவன் தனது மகனாகிய யோவான்ஸ்நானன் பிறந்தவுடன் அவனுக்கு யோவான் என்று பேரிட எழுதி காட்டியவுடன், கர்த்தர் அவன் நாவின் கட்டை அவிழ்த்தார். அவன் தேவனை ஸ்தோத்தரித்துப் பேசினான். ஆகவே தேவன் நீ பிறப்பதற்கு முன்பே உன்னை முன்குறித்திருக்கிறார் என்பதை விசுவாசி.

மேலும் இயேசு கிறிஸ்துவினுடைய வாழ்க்கையைப் பாருங்கள்.

"எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது". (மீகா 5: 2)

"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதான பிரபு" என்னப்படும். (ஏசாயா 9:6)

"தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்". (ஏசாயா 9:7).

மேற்கூறிய வசனங்களின்படி இயேசு கிறிஸ்துவின் பிறக்கும் இடத்தையும், அவருடைய செயல்களின் தன்மைகளையும் முன்குறித்தே வைத்தார்.

(இ) முன்குறித்ததை யோசித்த மரியாள் :

இயேசு கிறிஸ்து அவருடைய தாயாகிய மரியாளிடத்தில் பிறக்கும் முன்பு, மரியாள் கன்னிகை யாயிருக்கும்பொழுது அவள் வீட்டில் தேவதூதன் பிரவேசித்து, "மரியாளே, பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய் இதோ, நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக, அவர் பெரியவராயிருப்பார், உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார்; கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார். அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது" என்றான்.

"அதற்கு மரியாள், தேவதூதனை நோக்கி : இது எப்படியாகும்? புருஷனை அறியேனே" என்றாள்.

"தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக : பரிசுத்த ஆவி உன் மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன் மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்.

"இதோ, உனக்கு இனத்தாளாயிருக்கிற எலிசபெத்தும் தன் முதிர் வயதிலே ஒரு புத்திரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள், மலடியென்னப்பட்ட அவளுக்கு இது ஆறாம் மாதம்".

"தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை என்றான். அதற்கு மரியாள்: இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை; உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள்". (லூக்கா 1: 30-38)

அதேசமயத்தில் இயேசுவின் தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில் அவர்கள் கூடிவருமுன்னே அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது.

(ஈ) ஐயப்பட்ட யோசேப்பு :

அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து அவளை அவமானப்படுத்த மனதில்லாமல், இரகசியமாய் அவளை தள்ளிவிட யோசனையாயிருந்தான்.

அவன் இப்படிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில் கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்கு காணப்பட்டு தாவீதின் குமாரனாகிய யோசேப்பே உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக் கொள்ள ஐயப்படாதே அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினாலுண்டானது.

அவள் ஒரு குமாரனைப் பெறுவாள் அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான்.

யோசேப்பு நித்திரை தெளிந்து எழுந்து, கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன் மனைவியைச் சேர்த்துக் கொண்டு அவள் தன் முதற்பேரான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து, அவருக்கு இயேசு என்று பேரிட்டான். (மத்தேயு 1: 18-25)

இவ்வசனங்களின்படி இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு முன்பாக அவளுடைய தாயாகிய மரியாளிடமும், அவருடைய தகப்பனாகிய யோசேப்பிடமும் தேவதூதன் தோன்றி இயேசு கிறிஸ்துவின் பிறப்பைப் பற்றி முன்குறித்திருந்ததை தேவன் அவர்களுக்குத் தெளிவாக வெளிப்படுத்தி அவர்களுடைய ஐயங்களை நீக்கி அவர்களுடைய பெயரையும் அதன் மகத்துவங்களையும் அறிவித்து அதன் மூலமாய் அவர்களை பூரணமான விசுவாசத்திற்குள் நடத்தியபின் இயேசுவின் பிறப்பு நிகழ்ந்தது.

என் வாழ்க்கையை முன்குறித்த தேவன் :

என்னுடைய வாழ்க்கையில் என் தந்தை திரு.C.**சாமுவேல் செல்லையா** எனது தாய் திருமதி.**செல்வம் செல்லையா** அவர்களுக்கு தேவன் முன்குறித்தபடியே எனது அக்காளாகிய திருமதி.**ராணி தங்கரத்தினம்** அவர்களையும் என்னையும் அவர்களுக்குப் பிள்ளைகளாய்த் தந்து ஆசீர்வதித்தார். எனது அக்காள் பிறந்த பின்பு எனது தாயாருக்கு இரண்டு கருசிதைவுகள் ஏற்பட்டது. அந்த இரண்டு பிள்ளைகளும் ஆண் குழந்தைகளாயிருந்தார்கள். அதன்பின்பு நான் பிறக்கும் பொழுது தேவனாகிய கர்த்தர்

அவர்களுடைய ஐயத்தை நீக்கி எனக்கு ஜீவனைத் தந்து இவ்வுலகிலே வாழச் செய்திருக்கிறார். தேவன் என்னை எவ்வாறு முன்குறித்து எனக்கு ஜீவனைத் தந்து வாழச் செய்திருக்கிறார் என்றும், நீ அவருக்காக வாழவேண்டுமென்றும் என் தாயார் அதை எனக்கு மிகத் தெளிவாய் போதித்தார்கள். தேவனாகிய கர்த்தர் அவருடைய வார்த்தையின்படி என் தாயார் மூலமாய் எனக்குப் போதித்த அவருடைய சித்தத்தை விசுவாசித்தேன்.

தேவனாகிய இயேசு கிறிஸ்து நான் பிறப்பதற்கு முன்பே என்னை முன்குறித்திருக்கிறார் என்பதை விசுவாசிக்கும் பொழுதுதான் என் வாழ்க்கை வெற்றியான வாழ்க்கையாக அமைந்திருக்கிறது. ஆகவே பிரியமான சகோதர சகோதரிகளே நீங்களும்,

"என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும் உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது" (சங்கீதம் 39:16) என்று தாவீது அவனைக் குறித்து கர்த்தர் முன்குறித்து எழுதி வைத்திருக்கிறார் என்று விசுவாசித்து பாடியது போல, நீயும் பிறப்பதற்கு முன்பே கர்த்தர் உன்னை முன்குறித்திருக்கிறார் என்பதை விசுவாசி. அதுவே உன் வாழ்வு வெற்றியுள்ள வாழ்வாய் அமைய முதல்படியாகும். அல்லேலூயா!

---

2. அழைத்த தேவன்

"எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்". (ரோமர் 8:30)

முன்குறித்த தேவன் நம் ஒவ்வொருவரையும் அழைத்திருக்கிறார். அழைத்திருப்பது யார்? உண்மை யுள்ளவர் அழைத்திருக்கிறார். "தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்". (1 கொரி. 1:9).

உண்மையுள்ள தேவனாகிய கிறிஸ்து உன்னை அழைத்திருக்கிறபடியால், அந்த அழைப்பு உண்மையுள்ளதா யிருக்கிறது.

அ) ஆபிரகாமின் அழைப்பைப் பாருங்கள்

"கர்த்தர் ஆபிரகாமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ".

"நான் உன்னை பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாயிருப்பாய்". (ஆதி. 12:1-2)

"அவர் அவனை வெளியே அழைத்து: நீ வானத்தை அண்ணாந்து பார், நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால், அவைகளை எண்ணு என்று சொல்லி; பின்பு அவனை நோக்கி: உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார்". (ஆதி. 15: 5)

பின்பு கர்த்தர் ஆபிரகாமை நோக்கி உன் கண்களை ஏறெடுத்து நீ இருக்கிற இடத்திலிருந்து வடக்கேயும் தெற்கேயும் கிழக்கேயும் மேற்கேயும் நோக்கிப்பார்.

"நீ பார்க்கிற இந்தப்பூமி முழுவதையும் நான் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றைன்றைக்கும் இருக்கும்படி கொடுத்து, உன்

சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப் பண்ணுவேன்". (ஆதி. 13:15,16)

இவ்வாறு கர்த்தர் ஆபிரகாமை அழைத்து அனைத்தையும் விட்டு தான் காண்பிக்கும் தேசத்துக்குப் போகச் சொன்னார். ஆபிரகாமோ தாமதமின்றி கர்த்தருடைய வார்த்தைகளை விசுவாசித்து கீழ்ப்படிந்து நடந்தான். மேலும் அந்த அழைப்பிலே கர்த்தர் அவன் மீது வைத்திருக்கிற திட்டத்தையும் அதனால் கிடைக்கும் ஆசீர்வாதத்தையும் வெளிப்படுத்தினார்.

ஆ) மோசேயின் அழைப்பைப் பாருங்கள்

கர்த்தர் மோசேயை நோக்கி "இப்பொழுதும் இஸ்ரவேல் புத்திரரின் கூக்குரல் என் சந்நிதியில் வந்து எட்டினது; எகிப்தியர் அவர்களை ஒடுக்குகிற ஒடுக்குதலையும் கண்டேன்".

நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா என்றார். (யாத்.3:9-10).

அப்பொழுது மோசே தேவனை நோக்கி : நான் திக்குவாயனும் மந்தநாவுமுள்ளவன் என்றான்.

"அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: மனுஷனுக்கு வாயை உண்டாக்கினவர் யார்? ஊமையனையும் செவிடனையும் பார்வையுள்ளவனையும் குருடனையும் உண்டாக்கினவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவா?

ஆதலால், நீ போ; நான் உன் வாயோடே இருந்து, நீ பேச வேண்டியதை உனக்குப் போதிப்பேன் என்றார்.

அதற்கு அவன் : ஆண்டவரே, நீர் அனுப்பச் சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும் என்றான்.

அப்பொழுது கர்த்தர் மோசேயின் மேல் கோபம் மூண்டவராகி: லேவியனாகிய ஆரோன் உன் சகோதரன் அல்லவா? அவன் நன்றாய்ப் பேசுகிறவன் என்று அறிவேன்; அவன் உன்னைச் சந்திக்கப் புறப்பட்டு வருகிறான்; உன்னைக் காணும்போது அவன் இருதயம் மகிழும்.

நீ அவனோடே பேசி, அவன் வாயில் வார்த்தைகளைப் போடு; நீங்கள் செய்ய வேண்டியதை உங்களுக்கு உணர்த்துவேன்.

அவன் உனக்குப் பதிலாக ஜனங்களோடே பேசுவான்; இவ்விதமாய் அவன் உனக்கு வாயாக இருப்பான், நீ அவனுக்குத் தேவனாக இருப்பாய்.

இந்தக் கோலையும் உன் கையிலே பிடித்துக் கொண்டுபோ, இதனால் நீ அடையாளங்களைச் செய்வாய் என்றார். (யாத். 4:10-17)

கர்த்தர் மோசேயிடம் இஸ்ரவேல் மக்கள் எகிப்தின் அடிமைத்தனத்தினால் ஒடுக்கப்படும் போது அவர்கள் கூக்குரலைக் கேட்டு பார்வோனின் கையிலிருந்து அவர்களை விடுதலையாக்கி அவர்களுக்காக ஆயத்தமாய் வைத்திருந்த கானான் தேசத்திற்கு அழைத்து போகச் சொன்னார். ஆகவே இஸ்ரவேல் மக்களை விடுவிக்கவும், அவர்களை கானானுக்கு வழிநடத்தவும் கர்த்தர் மோசேயை அழைத்தார்.

இ) யோசுவாவின் அழைப்பைப் பாருங்கள்

மோசே இறந்த பின்பு இஸ்ரவேல் மக்களை கானானுக்குள் வழிநடத்த கர்த்தர் யோசுவாவை அழைத்தார்.

கர்த்தர் யோசுவாவை நோக்கி, “என் தாசனாகிய மோசே மரித்துப் போனான்; இப்பொழுது நீயும் இந்த ஜனங்கள் எல்லாரும் எழுந்து, இந்த யோர்தானைக் கடந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு நான் கொடுக்கும் தேசத்துக்குப் போங்கள். நான் மோசேக்குச் சொன்னபடி உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன்”.

நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை; நான் மோசேயோடே இருந்தது போல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை.

“பலங்கொண்டு திடமனதாயிரு; இந்த ஜனத்தின் பிதாக்களுக்கு நான் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தை நீ இவர்களுக்குப் பங்கிடுவாய்”. (யோசுவா 1:2,3,5,6)

கர்த்தர் யோசுவாவிடம் இஸ்ரவேல் மக்களை கானானுக்குள் அழைத்துச் சென்று அதை 12 இஸ்ரவேல் கோத்திரத்தாருக்கும் பங்கிட்டுக் கொடுக்கும்படி அழைத்தார்.

ஈ) தாவீதின் அழைப்பைப் பாருங்கள்

“கர்த்தர் சாமுவேலை நோக்கி: இஸ்ரவேலின் மேல் ராஜாவாயிராதபடிக்கு, நான் புறக்கணித்துத் தள்ளின சவுலுக்காக நீ எந்தமட்டும் துக்கித்துக் கொண்டிருப்பாய் : நீ உன் கொம்பை தைலத்தால் நிரப்பிக் கொண்டு வா; பெத்லெகேமியனாகிய ஈசாயினிடத்துக்கு உன்னை அனுப்புவேன்; அவன் குமாரரில் ஒருவனை நான் ராஜாவாகத் தெரிந்து கொண்டேன்” என்றார்.

“ஈசாயைப் பலிவிருந்துக்கு அழைப்பாயாக; அப்பொழுது நீ செய்ய வேண்டியதை நான் உனக்கு அறிவிப்பேன்; நான் உனக்குச் சொல்லுகிறவனை எனக்காக அபிஷேகம் பண்ணுவாயாக” என்றார்.

“இப்படி ஈசாய் தன் குமாரரில் ஏழு பேரை சாமுவேலுக்கு முன்பாகக் கடந்து போகப் பண்ணினான்; பின்பு சாமுவேல் ஈசாயைப் பார்த்து: கர்த்தர் இவர்களில் ஒருவனையும் தெரிந்து கொள்ளவில்லை என்று சொல்லி, உன் பிள்ளைகள் இவ்வளவுதானா என்று ஈசாயைக் கேட்டான். அதற்கு அவன்: இன்னும் எல்லாருக்கும் இளையவன் ஒருவன் இருக்கிறான் அவன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறான் என்றான்; அப்பொழுது சாமுவேல் ஈசாயை நோக்கி: ஆள் அனுப்பி அவனை அழைப்பி; அவன் இங்கே வருமட்டும் நான் பந்தியிருக்க மாட்டேன்” என்றான்.

“அவன் சிவந்த மேனியும், அழகிய கண்களும் நல்ல ரூபமுள்ளவனுமாயிருந்தான்; அப்பொழுது கர்த்தர்: இவன்தான், நீ எழுந்து இவனை அபிஷேகம் பண்ணு” என்றார்.

“அப்பொழுது சாமுவேல், தைலக் கொம்பை எடுத்து அவனை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம் பண்ணினான்; அந்நாள் முதற்கொண்டு, கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின் மேல் வந்து இறங்கியிருந்தார்”. (1சாமுவேல் 16:1,3,10-13).

இங்கே தாவீதுனுடைய அழைப்பைப் பாருங்கள். ஒரு வித்தியாசமான அழைப்பாயிருக்கிறது. கர்த்தர் தீர்க்கதரிசியாகிய சாமுவேலை அனுப்பி ஈசாயின் மகனாய் இருக்கிற தாவீதை அபிஷேகம் பண்ணச் செய்தார். கரவலாடுகளின் பின்சென்று கொண்டிருந்த தாவீதை ஆள் அனுப்பி அவனை வரவழைத்து தைலத்தினால் அவனை அபிஷேகம் பண்ணி இஸ்ரவேல் மக்களை ஆளுகின்ற ராஜாவாக தாவீதை வைத்தார். தாவீதின் அழைப்பு இஸ்ரவேல் மக்களை தேவசித்தத்தின்படி ஆள அழைக்கப்பட்ட அழைப்பு.

உ) பேதுருவின் அழைப்பைப் பாருங்கள்

"இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடந்து போகையில், மீன் பிடிக்கிறவர்களாயிருந்த இரண்டு சகோதரராகிய பேதுரு என்னப்பட்ட சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும், கடலில் வலை போட்டுக் கொண்டிருக்கிற போது, அவர்களைக் கண்டு:

என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார்.

உடனே அவர்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள். (மத். 4:18-20)

மீன் பிடித்துக் கொண்டிருந்த பேதுருவை இயேசு கண்டு என் பின்னே வா உன்னை மனுஷரைப் பிடிப்பவனாக்குவேன் என்று சொல்லி அவனை அழைத்தார். பேதுருவின் அழைப்பு ஆத்துமாக்களை ஆதாயப்படுத்துகின்ற அழைப்பு.

ஊ) சீஷர்களின் அழைப்பைப் பாருங்கள்

"அந்நாட்களிலே, அவர் ஜெபம் பண்ணும்படி ஒரு மலையின் மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்".

பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் 12 பேரைத் தெரிந்து கொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார்.

அவர்கள் யாரெனில், பேதுரு என்று தாம் பேரிட்ட சீமோன், அவன் சகோதரனாகிய அந்திரேயா, யாக்கோபு, யோவான், பிலிப்பு, பர்த்தொலொமேயு, மத்தேயு, தோமா, அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபு, செலோத்தே என்னப்பட்ட சீமோன், யாக்கோபின் சகோதரனாகிய யூதா, துரோகியான யூதாஸ்காரியோத்து என்பவர்களே. (லூக்.6:12-16)

இயேசு கிறிஸ்து தம்முடைய சீஷர்களை வரவழைத்து அவர்களில் 12 பேரைத் தெரிந்து கொண்டார். அவர்களின் அழைப்பு அப்போஸ்தலரின் அழைப்பு. எங்கும் சுற்றித் திரிந்து இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவித்து பிணியாளிகளைக் குணமாக்கி, பிசாசின் பிடியில் அகப்பட்டவர்களை விடுவித்து நித்திய ராஜ்யத்திற்கு அழைத்துச் செல்ல அழைக்கப்பட்டார்கள்.

எ) பவுலின் அழைப்பைப் பாருங்கள்

“அவன் பிரயாணமாய்ப் போய் தமஸ்குவுக்குச் சமீபித்தபோது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது”.

“அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது: சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான்”.

“அதற்கு அவன்: ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்கு கர்த்தர், நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே, முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்” என்றார்.

அவன் நடுங்கித் திகைத்து, ஆண்டவரே, நான் என்ன செய்யத் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர் : நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார். (அப். 9:3-6)

கர்த்தர் அனனியாவுக்குத் தரிசனமாகி சவுலை சந்தித்து அவன் மேல் கையை வைத்து ஜெபிக்க கூறியபோது சவுலைப் பற்றி அனனியாவிடம் கூறியதாவது : அதற்குக் கர்த்தர்: நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல்

புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான்.

"அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபட வேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன்" என்றார். (அப். 9:15,16)

கர்த்தர் கிறிஸ்துவைப் பின்பற்றியவர்களைத் துன்புறுத்திய பவுலைச் சந்தித்து அவன் புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் கர்த்தருடைய நாமத்தை அறிவிக்கவும், அதனால் வரும் பாடுகளை அவன் அனுபவிக்கவும் கர்த்தர் அவனை அழைத்தார்.

பிரியமான சகோதர சகோதரிகளே மேலே கூறப்பட்டுள்ள 7 பேருடைய அழைப்பைப் பாருங்கள். ஒவ்வொருவரும் அழைக்கப்பட்ட அழைப்பு வித்தியாசமானது. அழைக்கப்பட்ட இடம் வித்தியாசமானது, அழைக்கப்பட்ட விதம் வித்தியாசமானது. அதேசமயத்தில் அவர்கள் அனைவரும் தேவனாகிய கர்த்தரின் அழைப்பை முழுமையாய் விசுவாசித்து அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டார்கள். ஆகவே அவர்களுடைய வாழ்க்கை வெற்றியுள்ள வாழ்க்கையாயிருந்தது. நீயும் உன் அழைப்பை தெரிந்து கொள்.

என்னுடைய வாழ்க்கையில் கர்த்தருடைய அழைப்பைத் தெரிந்து கொள்ள ஆசைப் பட்டேன்

நான் ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்தவன். சிறுவயதுமுதல் கிறிஸ்தவ முறைப்படி வளர்க்கப்பட்டேன். நான் M.A. படிப்பு முடித்தவுடன் எந்தத் துறையில் பணிக்குச் செல்வது என்ற கேள்வி எழுந்தது. என்னுடைய தகப்பனார் காவல்துறையில் பணியாற்றியதால், என்னை காவல்துறையில் சேர்க்க வேண்டுமென்று வாஞ்சித்தார்கள். என்னுடைய தாயார் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றினார். என் தாயார் காவல்துறை பணிக்குச் சென்றால் ஏற்படும் கர்த்தருக்குப் பிரியமில்லாத பல வழிகளையும், சோதனைகளையும், இடையூறுகளையும் தவிர்க்கவும், கர்த்தருக்குப் பயந்து உத்தமமாய் தேவ சமாதானத்தோடு வாழவும் ஆசிரியர் பணியில்

சேர வேண்டுமென்று வாஞ்சித்து கர்த்தரிடம் வேண்டுதல் செய்தார்கள்.

எதிர்பாராத விதத்தில் ஒரு கல்லூரியில் பணிபுரியும்படி தேவனாகிய கர்த்தர் செய்தார். அந்தப் பணியிலிருந்து கொண்டே பல துறைகளுக்கும் வங்கிகளுக்கும் தேர்வுகள் எழுதியும் முக்கியமான நபர்களைச் சந்தித்தும் முயற்சி செய்தேன். ஆனால் கர்த்தரோ அவருடைய சித்தத்தின்படி கல்லூரியில் ஆசிரியராகவே பணிபுரியச் செய்தார்.

மேலும் ஊழியத்திற்கும் எனக்கு அழைப்பு கொடுத்தார். நான் **1970 ஆம் ஆண்டு சிவகாசியில் அய்யா நாடார் ஜானகி அம்மாள் கல்லூரியில்** பணிபுரியும் பொழுது சகோ. D.G.S. **தினகரன்** அவர்கள் சிவகாசியிலுள்ள **ராக்லண்ட் ஆலயத்தில்** மூன்று நாள் நற்செய்தி கூட்டங்களை நடத்தி வந்தார்கள். அந்த மூன்று நாள் கூட்டத்திலும் நான் பங்குபெற்று ஊழியத்திற்கு என்னால் இயன்ற உதவிகளைச் செய்தேன். அப்பொழுது ஒருநாள் கூட்ட முடிவில் அனைவருக்காக ஜெபிக்கும் பொழுது நான் இருக்கும் இடத்தைக் குறிப்பிட்டு சகோதரனே கர்த்தர் உங்களை ஊழியத்தில் பயன்படுத்த இருக்கிறார் என்று தெளிவாய்க் கூறினார். அப்பொழுது பணிபுரிந்து கொண்டே ஊழியத்தைச் செய்யும் அழைப்பை ஏற்றுக் கெண்டேன். இவ்வாறு கர்த்தர் என் வாழ்க்கையில் அவர் நியமித்த பணியையும், ஊழியத்தையும் செய்ய அவருக்குள் விசுவாசிக்க ஆரம்பித்தேன்.

பிரியமான சகோதரனே சகோதரியே முதலாவது கர்த்தர் உன்னை முன்குறித்து வைத்ததை விசுவாசித்து, அடுத்து உன்னை அழைத்திருக்கிறார் என்பதையும் விசுவாசி. அப்பொழுது உன் வாழ்க்கையை கிறிஸ்து வெற்றியான வாழ்க்கையாக மாற்றித் தருவார். கிறிஸ்துவின் நாமத்திற்கே மகிமை உண்டாவதாக. அல்லேலூயா!

---

3. வழி நடத்தும் தேவன்

முன்குறித்து, அழைப்பு கொடுத்த தேவனாகிய கர்த்தர் அவர்களை வழிநடத்துகிற தேவனாயிருக்கிறார்.

அ) திக்குவாயனான மோசையை அழைத்த கர்த்தர் அவனை வழிநடத்தினார் :

கர்த்தருடைய அழைப்பை ஏற்றுக் கொண்ட மோசே இஸ்ரவேல் மக்களை பார்வோனின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கி அவர்களை கானான் தேசத்திற்கு அழைத்துச் சென்றான். திக்குவாயும் மந்தநாவுமுள்ளவனாயிருந்த மோசே ஏறத்தாழ 20 லட்சம் மக்களை அனுதினமும் வழிநடத்துவது எவ்வளவு சிரமம்? எவ்வளவு கடினம்? ஆனால், மோசேயோ கர்த்தருடைய வழிநடத்துதலுக்காய் அவன் காத்திருந்தான்.

"உம்முடைய கண்களில் இப்பொழுது எனக்குக் கிருபை கிடைத்ததானால் நான் உம்மை அறிவதற்கும், உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைப்பதற்கும், உம்முடைய வழியை எனக்கு அறிவியும்; இந்த ஜாதி உம்முடைய ஜனமென்று நினைத்தருளும் என்றான்".

"அதற்கு அவர், என் சமுகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்றார்.

"அப்பொழுது அவன் அவரை நோக்கி : உம்முடைய சமுகம் என்னோடே கூடச் செல்லாமல் போனால், எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டு போகாதிரும்".

"எனக்கும் உமது ஜனங்களுக்கும் உம்முடைய கண்களிலே கிருபை கிடைத்ததென்பது எதினால் அறியப்படும். நீர் எங்களோடே வருவதினால் அல்லவா? இப்படியே பூமியின் மேலுள்ள ஜனங்கள் எல்லாரிலும். நானும் உம்முடைய ஜனங்களும் விசேஷித்தவர்கள் என்று விளங்கும் என்றான்". (யாத். 33:13-16)

மோசே அனைத்து இஸ்ரவேல் மக்களையும் அழைத்துச் செல்வதற்கு முன்பாக கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைக்கும்படி வேண்டினான். கர்த்தருடைய வழியை அறிவிக்கும்படி அவரை நாடினான். மேலும் கர்த்தர் அவர்களோடே இருக்கும்படி வாஞ்சித்தான். கர்த்தருடைய

வழியை அவன் அறியாமல் இஸ்ரவேல் மக்களை அவன் வழிநடத்தவில்லை.

கர்த்தர் மோசேயை நோக்கி: முந்தின கற்பனைகளுக்கு ஒத்த இரண்டு கற்பலகைகளை இழைத்துக்கொள். நீ உடைத்துப் போட்ட முந்தின பலகைகளில் இருந்த வார்த்தைகளை அவைகளில் எழுதுவேன்.

“விடியற்காலத்தில் நீ ஆயத்தமாகி, சீனாய் மலையில் ஏறி, அங்கே மலையின் உச்சியில் காலமே என் சமூகத்தில் வந்து நில்”. (யாத். 34:1,2)

மேலும். அங்கே அவன் அப்பம் புசியாமலும் தண்ணீர் குடியாமலும் இரவு பகலும் 40 நள் கர்த்தரோடேயிருந்தான்; அவன் பத்துக் கற்பனைகளாகிய உடன்படிக்கையின் வார்த்தைகளைப் பலகைகளில் எழுதினான். (யாத். 34:28)

கர்த்தர் மோசேயோடு முகமுகமாய் பேசி பத்து கற்பனைகளை அவனுக்குத் தந்து அந்த வார்த்கைளின்படியே மோசேயோடும், இஸ்ரவேல் மக்களோடும் உடன்படிக்கைப் பண்ணினார். அந்த பத்து கற்பனைகளின்படி மோசே இஸ்ரவேல் மக்களை வழிநடத்த கர்த்தர் உதவினார்.

ஆ) எளியவனான கிதியோனை தேவனாகிய கர்த்தர் வழிநடத்தியதைப் பாருங்கள் :

மீதியானியராலே இஸ்ரவேல் மக்கள் மிகவும் சிறுமைப்பட்டார்கள். இஸ்ரவேல் மக்கள் கர்த்தரிடத்தில் முறையிட்டார்கள். அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமாகி: பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்.

“அப்பொழுது கிதியோன் அவரை நோக்கி: ஆ, என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டுவரவில்லையா என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே? இப்பொழுது கர்த்தர் எங்களைக் கைவிட்டு, மீதியானியரின் கையில் எங்களை ஒப்புக்கொடுத்தாரே என்றான்”.

அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப் பார்த்து: உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலரை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நானல்லவா என்றார்.

அதற்கு அவன் : ஆ என் ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதினால் ரட்சிப்பேன்; இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது; என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான்.

அதற்குக் கர்த்தர்: நான் உன்னோடேகூட இருப்பேன்; ஒரே மனுஷனை முறிய அடிப்பது போல நீ மீதியானியரை முறிய அடிப்பாய் என்றார் (நியா. 6: 12-17). இவ்வாறு பேசிய பின்பு கிதியோன் கர்த்தரிடத்தில் எனக்கு ஒரு அடையாளத்தைக் காட்டும் என்று வேண்டுதல் செய்தான்.

“இதோ, நான் மயிருள்ள ஒரு தோலைக் களத்திலே போடுகிறேன்; பனி தோலின் மேல் மாத்திரம் பெய்து, பூமியெல்லாம் காய்ந்திருந்தால், அப்பொழுது தேவரீர் சொன்னபடி இஸ்ரவேலை என் கையினால் இரட்சிப்பீர் என்று அதினாலே அறிவேன் என்றான்.

அப்படியே ஆயிற்று. அவன் மறுநாள் காலமே எழுந்திருந்து, தோலைக் கசக்கி, அதிலிருந்த பனி நீரை ஒரு கிண்ணம் நிறைய பிழிந்தான்.

அப்பொழுது கிதியோன் தேவனை நோக்கி: நான் இன்னும் ஒருவிசை மாத்திரம் பேசுகிறேன், உமது கோபம் என் மேல் மூளாதிருப்பதாக; தோலினாலே நான் இன்னும் ஒரேவிசை சோதனை பண்ணட்டும்: தோல் மாத்திரம் காய்ந்திருக்கவும், பூமியெங்கும் பனி பெய்திருக்கவும் கட்டளையிடும் என்றான்.

அப்படியே தேவன் அன்று ராத்திரி செய்தார்; தோல் மாத்திரம் காய்ந்திருந்தது, பூமியெங்கும் பனி பெய்திருந்தது”. (நியா. 6:37-40)

பலவீனமான, எளியவனான கிதியோனை தேவனாகிய கர்த்தர் வாக்குத்தத்தம் செய்து, அவன் பலவீனத்தில் அவரே கூடஇருந்து பலப்படுத்தி, விசுவாசம் உறுதிப்பட கிதியோன் வேண்டிய அடையாளங்களைச் செய்து, அவனை வழிநடத்தி மீதியானியரை முறியடிக்கச் செய்தார்.

இ) பணிவிடைக்காரனான யோசுவாவை வழிநடத்தியதைப் பாருங்கள் :

மோசே இறந்தபின்பு கர்த்தர் யோசுவாவை அழைத்து இஸ்ரவேல் மக்களை கானானுக்குள் அழைத்துச் செல்லச் செய்தார். அப்பொழுது "கர்த்தர் யோசுவாவை நோக்கி: நான் மோசேயோடே இருந்தது போல, உன்னோடும் இருக்கிறேன் என்பதை இஸ்ரவேலரெல்லாரும் அறியும்படிக்கு, இன்று அவர்கள் கண்களுக்கு முன்பாக உன்னை மேன்மைப்படுத்துவேன்.

உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியரைப் பார்த்து : யோர்தானில் நில்லுங்கள் என்று நீ கட்டளையிடுவாயாக" என்றார். (யோசு. 3:7,8).

கர்த்தரின் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்களின் உள்ளங்கால்கள் யோர்தானின் தண்ணீரிலே பட்டமாத்திரத்தில், யோர்தானின் தண்ணீர் ஓடாமல் ஒரு குவியலாக நின்றது. இஸ்ரவேல் மக்கள் தண்ணீரற்ற உலர்ந்த தரைவழியாகக் கடந்து சென்றனர். இவ்வாறு கர்த்தர் சகல இஸ்ரவேலரின் கண்களுக்கு முன்பாக யோசுவாவை மேன்மைப்படுத்தினார். அவர்கள் மோசேக்கு பயந்திருந்தது போல அவனுக்கும், அவன் உயிரோடிருந்த நாளைல்லாம் பயந்திருந்தார்கள்.

பின்பு எமோரியர் இஸ்ரவேல் மக்களுக்கு விரோதமாய் எழுந்து வந்தபோது, "யோசுவா கர்த்தரை நேக்கிப் பேசி, பின்பு இஸ்ரவேலின் கண்களுக்கு முன்பாக: சூரியனே, நீ கிபியோன் மேலும், சந்திரனே, நீ ஆயலோன் பள்ளத்தாக்கின் மேலும், தரித்து நில்லுங்கள் என்றான்.

அப்பொழுது ஜனங்கள் தங்கள் சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டுமட்டும் சூரியன தரித்தது, சந்திரனும் நின்றது; இது யாசேரின் புஸ்தகத்தில் எழுதியிருக்க வில்லையா; அப்படியே சூரியன் அஸ்தமிக்கத் தீவிரிக்காமல், ஏறக்குறைய ஒரு பகல் முழுதும் நடுவானத்தில் நின்றது.

இப்படிக் கர்த்தர் ஒரு மனிதனுடைய சொல்கேட்ட அந்த நாளையொத்த நாள் அதற்கு முன்னுமில்லை அதற்குப் பின்னுமில்லை; கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம் பண்ணினார். (யோசு. 10: 12-14)

மோசேக்கு பணிவிடைக்காரனா(வேலைக்காரன்) யிருந்த யோசுவாவை கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்பாக அவன் மூலமாய் யோர்தானை பிளந்து அவர்களை கடக்கப் பண்ணினார். இதனால் யோசுவாவை அவர்கள் வேலைக்காரன் என்று எண்ணி அசட்டைப் பண்ணாமல் மோசேயேடு கர்த்தர் இருந்தது போல யோசுவாவோடும் கர்த்தர் இருக்கிறார் என்று கண்டு அவனுக்குப் பயந்திருந்தார்கள். இது அவர்களை கானானுக்குள் அழைத்துச் செல்ல மிகவும் பிரயோஜனமாயிருந்தது. மேலும் கர்த்தர் யோசுவாவின் வார்த்தையைக் கேட்டு சூரியனையும் சந்திரனையும் வானத்திலே நிற்க வைத்து யோசுவாவை வெற்றி பெறச் செய்தார்.

பிரியமான சகோதர, சகோதரிகளே நீ பணிவிடைக் காரனாக பணிபுரிகிறாயா? நீ கர்த்தரின் அழைப்பை ஏற்று உத்தமனாய் நடந்து உன் வழியை அவரிடத்தில் ஒப்புவி. அப்பொழுது கர்த்தர் உன் மூலமாய் அற்புதங்களைச் செய்து மற்றவர்களின் கண்களுக்கு முன்பாக உன்னை மேன்மைப்படுத்தி மற்றவர்களை வழிநடத்த உதவுவார்.

ஈ) வழிவிலகிச் சென்ற யோனாவின் வாழ்க்கை யைப் பாருங்கள் :

நினிவே பட்டணத்து மக்களின் அக்கிரமம் கர்த்தருடைய சமுகத்தில் வந்தெட்டியது. அப்பொழுது கர்த்தர் யோனாவிடம், "நீ எழுந்து மகாநகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி; அவர்களுடைய அக்கிரமம் என் சமுகத்தில் வந்துஎட்டியது என்றார். அப்பொழுது யோனா கர்த்தருடைய சமுகத்தினின்று விலகி, தர்ஷீசுக்கு ஓடிப்போகும்படி எழுந்து, யோப்பாவுக்குப் போய், தர்ஷீசுக்குப் போகிற ஒரு கப்பலைக் கண்டு, கூலி கொடுத்து, தான் கர்த்தருடைய சமுகத்தினின்று விலகும்படி, அவர்களோடே தர்ஷீசுக்குப் போகக் கப்பல் ஏறினான்". (யோனா 1:2,3)

வழிவிலகிச் சென்ற யோனா தர்ஷீசுக்குச் செல்லும் போது கடலில் கொந்தளிப்பு ஏற்பட்டது. தான் கர்த்தரின் சமுகத்தை விட்டு (கர்த்தருடைய வழியைவிட்டு விலகியது) விலகியது காரணம் என்பதை யோனா உணர்ந்தான். ஆகவே அவனை சமுத்திரத்தில் தூக்கிப்போடச் சொன்னான். அவர்கள் அவனை சமுத்திரத்தில் போட்டவுடன் சமுத்திரத்தின்

கொந்தளிப்பு அமர்ந்தது. யோனாவை ஒரு மீன் விழுங்கிற்று. அவன் மீன் வயிற்றில் மிகவும் நெருக்கப்பட்டான். அப்பொழுது கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான். கர்த்தர் அவன் சத்தத்தைக் கேட்டு மீன் வயிற்றிலிருந்து அவனை விடுவித்து நினிவேக்கு எதிராக பிரசங்கி என்றார்.

"யோனா நகரத்தில் பிரவேசித்து, ஒருநாள் பிரயாணம் பண்ணி: இன்னும் நாற்பதுநாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று கூறினான்".

அப்பொழுது நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசஞ் செய்யும்படிக் கூறினார்கள்; பெரியோர் முதல் சிறியோர் மட்டும் இரட்டுடுத்திக் கொண்டார்கள்.

அவர்கள் தங்கள் பொல்லாத வழியை விட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார். (யோனா 3:3,4,10)

யோனா கர்த்தருடைய வழியைவிட்டு விலகி தன்னுடைய வழியை தெரிந்து கொண்டு சென்றான். இதனால் அவன் பெரிய ஆபத்திற்குள் சிக்க வேண்டியிருந்தது. தன் தவற்றை உணர்ந்தான். கர்த்தர் அவனை விழுங்கும்படி ஒரு மீனுக்குக் கட்டளையிட்டார். மூன்று நாள் மீன் வயிற்றிலிருக்கும்பொழுது அவன் மிகவும் நெருக்கப்பட்டான். ஆத்துமா தொய்ந்து போயிற்று, கர்த்தரே தஞ்சம் என்று விசுவாசித்து விண்ணப்பம் பண்ணினான். கர்த்தர் அவனை விடுவித்து அவருடைய வழியில் நடக்கப்பண்ணி அவர் நியமித்த ஓட்டமாகிய நினிவேக்கு எதிராய் பிரசங்கம் பண்ணச் செய்தார். அதனால் அங்குள்ள லட்சத்து இருபதினாயிரம் பேரும் தங்கள் பொல்லாத வழிகளைவிட்டு கர்த்தரிடம் மனந்திரும்பினார்கள்.

இதனால், "யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள் (மத். 12:41,42) என்று இயேசு கிறிஸ்துவே அவனைக் குறித்து சாட்சி கொடுத்தார்".

பிரியமான சகோதரனே, சகோதரியே நீ கர்த்தருடைய வழியை விட்டு உன் வழியைத் தெரிந்து அதில் நடக்கிறாயா?

உன்னைச் சுற்றிலும் பிரச்சனைகள் சூழ்ந்திருக்கிறதா? நீ அமிழும் நிலையில் இருக்கிறாயா? உன் தவறை உணர்ந்து கர்த்தரிடத்தில் விண்ணப்பம் செய். தேவனாகிய கிறிஸ்து இன்றே உன்னை விடுவிப்பார். ஆனால் அவருடைய வழியை நீ அறிந்து அதன்படி செயல்படு. நீ நிலையான வெற்றியைக் காண்பாய். தேவனாகிய கிறிஸ்து இயேசுவே இதைச் செய்வார்.

உ) எதிர்த்து நின்றவனை :

இவ்வுலகில் கர்த்தர் அனைவரையும் வழிநடத்த வல்லவராயிருக்கிறார். கிறிஸ்து இயேசுவுக்கு எதிர்த்து நின்ற பவுலை தேவனாகிய கர்த்தர் வழிநடத்தினார்.

சவுல் என்பவன் இன்னுங் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய்;

“இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரீகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி தமஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான்.

அவன் பிரயாணமாய்ப் போய் தமஸ்குவுக்குச் சமீபித்தபோது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது;

அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது: சவுலே சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான்.

அதற்கு அவன், ஆண்டவரே, நீர் யார்? என்றான். அதற்குக் கர்த்தர், நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார்.

அவன் நடுங்கி திகைத்து: ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார். (அப். 9:1-6)

கர்த்தர் அவனை தமஸ்கு பட்டணத்திலிருக்கும் பொழுது அனனியாவை அனுப்பினார். அனனியா அவன் மேல் கையை வைத்தபோது, “சகோதரனாகிய சவுலே, நீ வந்த வழியிலே

உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார்" என்றான். (அப். 9:17) கர்த்தர் அவனை பரிசுத்த ஆவியினால் நிரப்பி கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று ஆலயங்களிலே பிரசங்கம் பண்ணச் செய்தார்.

என்னை வழிநடத்திய தேவன் :

நான் சிவகாசியில் கல்லூரியில் விரிவுரையாளராக ஓராண்டு பணிபுரிந்தேன். கர்த்தருடைய சித்தத்தின்படி **1971ஆம் ஆண்டு ஜூன்** மாதத்திலிருந்து **நாசரேத் மர்காஷிஸ் கல்லூரியில்** விரிவுரையாளராகப் பணிபுரிய கிருபை புரிந்தார். என் பெற்றோர்கள் கர்த்தருக்குப் பயந்து நடந்தவர்கள். அவர்கள் எனக்கு திருமணம் செய்யவேண்டுமென்று விரும்பினார்கள். நானும் கர்த்தருடைய சித்தம் நிறைவேற என் பெற்றோரின் விருப்பப்படி திருமணத்திற்கு சம்மதித்தேன். தேவனாகிய கர்த்தர் அவர்கள் மூலமாய் எனக்கு **1973 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5ம் தேதி** Dr.(திருமதி) **பிரேமா கிறிஸ்டோபர்,** M.B.B.S.-ஐ **சென்னை கதீட்ரல் ஆலயத்தில்** அவருடைய சமுகத்தில் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்ள வைத்தார்.

திருமணமாகி ஓராண்டு காலத்தில் குழந்தை யில்லாததால் என் மனைவி மிகவும் வேதனைப்பட்டாள். என் மனைவியின் இரத்தம் RH− குரூப்பைச் சேர்ந்தது. எனக்கு RH+ குரூப்பைச் சேர்ந்தது. இப்படிப்பட்டவர்களுக்கு குழந்தை பொதுவாக குறைஉள்ளதாக பிறக்கும். அக்கவலை வேறு என் மனைவியை வாட்டியது. **1974ஆம் ஆண்டு மூக்குப்பீறி என்ற இடத்தில்** சகோ. D.G.S. **தினகரன்** அவர்கள் நற்செய்திக் கூட்டத்தை நடத்தினார்கள். அப்பொழுது அக்கூட்டத்தில் என் மனைவி மிகவும் பாரப்பட்டு குழந்தைக்காக ஜெபம் பண்ணினாள். தேவனாகிய கர்த்தர் **1975ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் தேதி** என்னுடைய மூத்த மகளாகிய திருமதி. C. **லாவன்யா ஜோசப்பை** எந்தக் குறையுமின்றி தந்து ஆசீர்வதித்தார்.

பணியின் மத்தியில் கர்த்தருடைய வழியை நாடிய எங்களை அற்புதமாய் வழிநடத்தினார். 1983 ஆம் ஆண்டு என்

மனைவி D.G.O. பட்டப் படிப்புக்காக ஓராண்டு சென்னை செல்ல வேண்டியிருந்தது. என்னுடைய இரண்டு சிறிய பெண் பிள்ளைகளையும் எனது தாயாரையும் வைத்து பராமரிப்பது கடினமாயிருந்தது. கர்த்தரே எங்களை வழிநடத்தி அந்த ஓராண்டை எளிதாக கடக்கச் செய்தார். ஓராண்டு முடிந்தவுடன் என் மனைவி 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் 1ம் தேதி திரும்ப பணியில் சேர வேண்டும் அவள் படிக்கச் செல்லும்போது திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் பணிபுரிந்து வந்தாள். அதே இடத்திற்கு திரும்பிவருவதற்கு அக்கல்லூரியில் எந்தத் துறையும் ஒரு (Vacancy) காலியிடம் கூட இல்லை. அப்படியானால் தமிழ்நாட்டில் எந்த இடத்தில் காலியாயிருக்கிறதோ அங்கே என் மனைவியை பணிக்கு அனுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்பொழுது நாங்கள் தேவனாகிய கர்த்தர் ஒருவரையே நம்பி எங்களை வழிநடத்தும்படி வேண்டுதல் செய்தோம். வனாந்தரத்திலே வழியை உண்டாக்குகிற தேவன் எங்களுக்கு ஒரு அற்புதத்தைச் செய்தார். 1984 ஆம் ஆண்டு மார்ச் மாதம் கடைசி வாரத்தில் தற்காலிகமாக மூன்று மாதத்திற்கு திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் பணிபுரியும் ஆணையைப் பிறப்பித்து ஏப்ரல் 1ம் தேதி அதே திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் பணிபுரிய கிருபை செய்தார்.

மேலும் எனக்கென்று ஒரு கார் தேவை என்று கர்த்தரிடத்தில் வேண்டுதல் செய்தேன். அதற்காக அவருடைய சித்தத்தை அறிய விரும்பினேன். நான் இவ்வாறு ஜெபித்துக் கொண்டு ஒரு நற்செய்திக் கூட்டத்திற்குச் சென்றேன். அங்கே சகோ. **எபனேசர் பால்** அவர்கள் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். நான் என் தேவையை நினைத்து அக்கூட்டத்திற்குள் நுழைந்தேன். அப்பொழுது அவர்கள் இப்பொழுது ஒரு சகோதரர் தனக்கு கார் வேண்டுமென்று ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது கார் வாங்க வேண்டாம். சற்றுத் தாமதித்து உனக்கு காரை தருவேன் என்று தீர்க்கதரிசனமாக ஜெபத்தில் கூறினார்.

சில நேரங்களில் பணத்தை வைத்துக் கொண்டு எனக்கென்று ஒரு காரை வாங்க வேண்டுமென்று முயற்சித்தாலும்

கர்த்தர் என்னை வாங்க விடாமல் தடுத்து காத்திருக்கச் சொன்னார். ஏறத்தாழ 20 ஆண்டுகளாய் காத்திருந்தேன். தேவனாகிய கர்த்தர் அவருடைய கிருபையினால் 2008-ம் ஆண்டு மே மாதம் எனக்கென்று காரை, அவருடைய சித்தத்தின்படி வாங்கச் செய்தார். அது இன்றும் கர்த்தரின் ஆசீர்வாதமாய்த் திகழுகிறது. அவருடைய வழிநடத்துதல் எவ்வளவு பெரிது.

அனுதினமும் கர்த்தரின் சித்தத்தை நாடி அதை வாஞ்சித்து அவருடைய வழிநடத்துதலை அறிந்து செயல்படும் பொழுது தேவனாகிய கர்த்தர்

"நீ அநேகம் ஜாதிகளுக்கு கடன் கொடுப்பாய் நீயோ கடன் வாங்காதிருப்பாய்" (உபா.28:12) என்ற வாக்குத்தத்தத்தின்படி கர்த்தர் கிருபையாய் என்னை கடன் வாங்காமல் காத்து வழிநடத்தி அந்த ஆசீர்வாதத்தின் மகிமையை இன்றுவரை ருசிக்கச் செய்திருக்கிறார்.

பிரியமான சகோதர சகோதரியே உன் வாழ்க்கையில் ஒவ்வொரு காரியத்துக்கும் கர்த்தருடைய வழிநடத்துதலைத் தேடு. குடும்பத்தில் பிள்ளைகளின் வாழ்க்கையில், பணிசெய்யும் இடங்களில், ஊழியப்பாதையில் கர்த்தருடைய வழி என்ன என்பதை நாடி வேண்டுதல் செய். அவருடைய வழிக்கு முழுமையாய் ஒப்புக்கொடு. வழியற்ற சூழ்நிலையாயிருந்தாலும், இக்கட்டான சூழ்நிலை யாயிருந்தாலும் கர்த்தரை முழுமையாய் நம்பி அவரையே நோக்கிப் பார்த்து வேண்டுதல் செய். நான் பலவீனன், எளியவன், நான் வழிவிலகியவன், கர்த்தருக்கு எதிர்த்து நிற்பவன் என்று எண்ணி உன்னையே நொந்து கொண்டு இருக்கிறாயா? அவைகளையெல்லாம் விட்டுவிட்டு கிறிஸ்துவே நான் உம்மையே நம்பியிருக்கிறேன், உம்முடைய வழியை எனக்குக் காண்பியும், என்னை வழிநடத்தும் என்று வேண்டுதல் செய். இன்றே கிறிஸ்து உனக்கு அற்புதத்தைச் செய்வார். அவர் வழியைக் காண்பிப்பார். நீ வெற்றி பெறுவாய். அல்லேலூயா.

---

4. புடமிடும் தேவன்

நம்முடைய தேவனாகிய கர்த்தர் புடமிடும் தேவனாயிருக்கிறார். எதற்காக கர்த்தர் தம் ஜனத்தை புடமிடுகிறார்?

"இதோ, உன்னைப் புடமிட்டேன்; ஆனாலும் வெள்ளியைப்போலல்ல, உபத்திரவத்தின் குகையிலே உன்னைத் தெரிந்து கொண்டேன்". (ஏசாயா 48:10)

"ஆகையால், இதோ, நான் அவர்களை உருக்கி, அவர்களைப் புடமிடுவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; என் ஜனமாகிய குமாரத்தியை வேறெந்தப் பிரகாரமாக நடத்துவேன்?" (எரேமியா 9:7)

"அந்த மூன்றாம் பங்கை நான் அக்கினிக்குட்படப் பண்ணி, வெள்ளியை உருக்குகிறது போல அவர்களை உருக்கி, பொன்னைப் புடமிடுகிறது போல அவர்களைப் புடமிடுவேன்; அவர்கள் என் நாமத்தைத் தொழுது கொள்வார்கள்; நான் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்பேன்; இது என் ஜனமென்று நான் சொல்லுவேன், கர்த்தர் என் தேவன் என்று அவர்கள் சொல்லுவார்கள்". (சகரியா 13:9)

மேற்கண்ட மூன்று வசனங்களின்படி,

1. தெரிந்து கொள்வதற்காக
2. வழி நடத்துவதற்காக
3. விண்ணப்பத்தைக் கேட்பதற்காக

தேவனாகிய கர்த்தர் தம் ஜனத்தை புடமிடுகிறார். மேலும் புடமிடப்படுவதினால் எது வெளிப்படுகிறது?

"அழிந்து போகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும், அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப் பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்.

அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்பு கூறுகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும்

அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து.

உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும ரட்சிப்பை அடைகிறீர்கள்" (1பேருது 1:7-9).

புடமிடப்படும் பொழுது :

1. இயேசு கிறிஸ்துவின் மேல் வைத்துள்ள உன் விசுவாசம் வெளிப்படும்.
2. அந்த விசுவாசம் இயேசு கிறிஸ்துவின் கிரியைகளை, மகிமையை, அதிசயங்களை, அற்புதங்களை, வல்லமையை, இரக்கத்தை, சமாதானத்தை, விடுதலையை, மீட்பை, நித்தியவாழ்வை, பரிசுத்த ஆவியின் தன்மைகளை அவருடைய சித்தத்தை வெளிப்படுத்தும்.
3. இயேசு கிறிஸ்து உன்னில் வெளிப்படும் பொழுது கர்த்தர் உனக்கு புகழ்ச்சி, கனம், மகிமையை, மகிமையான சந்தோஷத்தை, ஆத்தும ரட்சிப்பைத் தருகிறார்.

அ) தேவனாகிய கர்த்தர் ஆபிரகாமை புடமிட்ட விதத்தைப் பாருங்கள் :

"இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, தேவன் ஆபிரகாமைச் சோதித்தார், எப்படியெனில், அவர் அவனை நோக்கி: ஆபிரகாமே என்றார், அவன், இதோ அடியேன் என்றான்.

அப்பொழுது அவர், உன் புத்திரனும் உன் ஏக சுதனும் உன் நேசகுமாரனுமாகிய ஈசாக்கை நீ இப்பொழுது அழைத்துக் கொண்டு, மோரியா தேசத்துக்குப் போய் அங்கே நான் உனக்குக் குறிக்கும் மலைகள் ஒன்றின் மேல் அவனைத் தகனபலியாகப் பலியிடு என்றார்.

தேவன் அவனுக்குச் சொல்லியிருந்த இடத்துக்கு வந்தார்கள்; அங்கே ஆபிரகாம் ஒரு பலிபீடத்தை உண்டாக்கி, கட்டைகளை அடுக்கி, தன் குமாரனாகிய ஈசாக்கைக் கட்டி, அந்தப் பலிபீடத்தில் அடுக்கிய கட்டைகளின் மேல் அவனைக் கிடத்தினான்.

பின்பு ஆபிரகாம் தன் குமாரனை வெட்டும்படிக்குத் தன் கையை நீட்டிக் கத்தியை எடுத்தான்.

அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் வானத்திலிருந்து, ஆபிரகாமே, ஆபிரகாமே என்று கூப்பிட்டார்; அவன் : இதோ, அடியேன் என்றான்.

அப்பொழுது அவர், பிள்ளையாண்டான் மேல் உன் கையைப் போடாதே, அவனுக்கு ஒன்றும் செய்யாதே; நீ அவனை உன் புத்திரன் என்றும், உன் எக சுதன் என்றும் பாராமல் எனக்காக ஒப்புக் கொடுத்தபடியினால் நீ தேவனுக்குப் பயப்படுகிறவன் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார்". (ஆதி. 22:1,2, 9-12)

இவ்வாறு கர்த்தர் ஆபிரகாம் கர்த்தரிடத்திலிருந்து காத்திருந்து பெற்ற ஒரே குமாரனாகிய ஈசாக்கை தனக்கு பலியிடச் சொன்னார். அதன் மூலமாய் ஆபிரகாம் கர்த்தருக்குப் பயப்படுகிறவன் என்பதை கர்த்தர் தெரிந்து கொண்டார்.

ஆ) கர்த்தர் யோசேப்பை புடமிட்டதைப் பாருங்கள் :

யோசேப்பு தன் தகப்பனுக்குக் கீழ்ப்படிந்து நடந்தான். அவன் தகப்பனாகிய யாக்கோபு மற்றவர்களை விட சற்று அதிக அன்பு அவன்மீது காட்டியதால் அவனுடைய மூத்த 10 சகோதரர்களும் அவனைப் பகைத்தார்கள். கர்த்தர் அவனுக்குத் தந்த சொப்பனத்தை அவர்களுக்கு அறிவிக்கும் பொழுது இன்னும் அதிகமாய் பகைத்து அவனைக் கடிந்து கொண்டார்கள். அவனை குழியில் தூக்கியெறிந்து அந்நியருக்கு 20 வெள்ளிக்காசுக்கு விற்றுப் போட்டார்கள். போத்திபாரின் வீட்டில் அவன் உத்தமனாய் பணி செய்யும் பொழுது போத்திபாரின் மனைவி அவனை தவறான வழிக்கு அழைத்தாள். அப்பொழுது கர்த்தருக்குப் பயந்து இத்தனைப் பெரிய பொல்லாப்புக்கு உடன்பட்டு தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வதெப்படி என்று விலகி ஓடினான். அவன் மீது பொய்க்குற்றம் சாட்டி

"யோசேப்பின் எஜமான் அவனைப் பிடித்து, ராஜாவின் கட்டளையால் காவலில் வைக்கப்பட்டவர்கள் இருக்கும் சிறைச்சாலையிலே அவனை ஒப்புவித்தான். அந்தச் சிறைச்சாலையில் அவன் இருந்தான்". (ஆதி. 39:20)

யோசேப்பு கர்த்தருக்குப் பயந்து உபத்திரவங்களை பொறுமையோடு சகித்ததால் கர்த்தர் அவனை ஞானத்தின் ஆவியினால் நிரப்பி பார்வோனின் சொப்பனத்திற்கு அர்த்தம் கூறச் செய்தார். தேவ இரகசியங்களை யோசேப்பின் மூலம் கர்த்தர் வெளிப்படுத்தியதைக் கண்டு பார்வோன் உன்னைப் போல் விவேகமும் ஞானமுமுள்ளவன் வேறொருவனு மில்லை என்று சொல்லி யோசேப்பை எகிப்து தேசம் முழுமைக்கும் அதிகாரியாக்கினான்.

தேவனாகிய கர்த்தர் யோசேப்பு புடமிடப்பட்டதை தாவீதின் மூலம், (சங். 105:17-22)

"அவர்களுக்கு முன்னாலே ஒரு புருஷனை அனுப்பினார். யோசேப்பு சிறையாக விற்கப்பட்டான்.

அவன் கால்களை விலங்கு போட்டு ஒடுக்கினார்கள்; அவன் பிராணன் இரும்பில் அடைபட்டிருந்தது.

கர்த்தர் சொன்ன வார்த்தை நிறைவேறுமளவும் அவருடைய வசனம் அவர்களைப் புடமிட்டது.

ராஜா ஆள் அனுப்பி அவனை கட்டவிழ்க்கச் சொன்னான். ஜனங்களின் அதிபதி அவனை விடுதலை பண்ணினான்.

தன் பிரபுக்களை அவன் மனதின்படி கட்டவும், தன் மூப்பர்களை ஞானிகளாக்கவும்.

அவனை தன் வீட்டுக்கு ஆண்டவனும், தன் ஆஸ்திகளுக்கெல்லாம் அதிபதியுமாக்கினான், இவ்வாறு வெளிப்படுத்தினார்.

பஞ்சகாலத்தில் தன் மூத்த 10 சகோதரர்களும் எகிப்துக்கு தானியம் கொள்ள வந்தபொழுது யோசேப்பு அவர்களைக் கண்டு

"என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப் போட்டதினால், நீங்கள் சஞ்சலப்படவேண்டாம்; அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம்; ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார்".

பூமியிலே உங்கள் வம்சம் ஒழியாமலிருக்க உங்களை ஆதரிக்கிறதற்காகவும், பெரிய ரட்சிப்பினால் உங்களை

உயிரோடே காப்பதற்காகவும் தேவன் என்னை உங்களுக்கு முன்னமே அனுப்பினார்", (ஆதி. 45: 5, 7)

தேவன் யோசேப்பைப் புடமிட்டதால் யோசேப்பு எகிப்தின் அதிபதியாயிருந்தபொழுது தன் சகோதரர்களைக் கண்டவுடன் பழிவாங்காமல் அவர்களோடு பட்சமாய்ப்பேசி அவர்களையும் தன் தகப்பனையும் தன் அருகாமையிலே வைத்து அவர்களைப் பராமரித்து தேவ அன்பையும் இரக்கத்தையும் வெளிப்படச் செய்தார்.

பிரியமான சகோதர சகோதரிகளே, உன் குடும்பத்தினர் உன்னை பகைக்கிறார்களா, நீ பணிசெய்யுமிடத்தில் உன் மீது பொய்க்குற்றம் சாட்டுகிறார்களா, நீ செய்யாத தவறுக்காக தண்டிக்கப்பட்டிருக்கிறாயா? இயேசு கிறிஸ்து உன்னை புடமிடுகிறார் என்று விசுவாசித்து பொறுமையோடு காத்திரு. நீ கர்த்தருக்குப் பயந்து நடக்கும் பொழுது கர்த்தர் உன்னை அவர்கள் கண்களுக்கு முன்னே நீ உயர்த்தப்படப் போவதைக் காண்பாய்.

3) உத்தமனை யோபு புடமிடப்பட்டதைப் பாருங்கள் :

யோபு உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய அவனைப் போல பூமியில் ஒருவனுமில்லை என்று கர்த்தரே சாட்சி கொடுத்தார். அதற்கு சாத்தான் உம்முடைய கையை நீட்டி அவனுக்கு உண்டானவை எல்லாம் தொடுவீரானால், அப்பொழுது அவன் உமது முகத்துக்கு எதிரே தூஷிக்கானோப் பாரும் என்றான். கர்த்தர் சாத்தானை நோக்கி : இதோ, அவனுக்கு உண்டானவையெல்லாம் உன் கையிலிருக்கிறது; அவன் மேல் மாத்திரம் உன் கையை நீட்டாதே என்றார்.

சாத்தான் யோபை சோதித்ததைப் பாருங்கள் :

"பின்பு ஒருநாள் யோபுடைய குமாரரும், அவன் குமாரத்திகளும், தங்கள் மூத்த சகோதரன் வீட்டிலே புசித்து திராட்சரசம் குடிக்கிறபோது,

ஒரு ஆள் அவனிடத்தில் வந்து : எருதுகள் உழுகிற போது, கழுதைகள் அவைகள் பக்கத்திலே மேய்ந்து கொண்டிருக்கையில், சபேயர் அவைகள் மேல் விழுந்து, ... வெட்டிப் போட்டார்கள்;

இவன் இப்படிப் பேசிக் கொண்டிருக்கையில், வேறொருவன் வந்து : வானத்திலிருந்து தேவனுடைய அக்கினி விழுந்து, ஆடுகளையும் வேலையாட்களையும் சுட்டெரித்துப் போட்டது; நான் ஒருவன் மாத்திரம் தப்பி, அதை உமக்கு அறிவிக்கும்படி வந்தேன் என்றான்.

இவன் இப்படிப் பேசிக் கொண்டிருக்கையில், வேறொருவன் வந்து : கல்தேயர் மூன்று பவுஞ்சாய் வந்து, ஒட்டகங்கள் மேல் விழுந்து, அவைகளை ஓட்டிக் கொண்டு போனார்கள்; வேலையாட்களையும் பட்டயக் கருக்கினால் வெட்டிப் போட்டார்கள் . . . என்றான்.

இவன் இப்படிப் பேசிக் கொண்டிருக்கையில், வெறொருவன் வந்து உம்முடைய குமாரரும் உம்முடைய குமாரத்திகளும், தங்களுடைய மூத்த சகோதரன் வீட்டிலே புசித்துத் திராட்சரசம் குடிக்கிறபோது,

வனாந்திரவழியாய்ப் பெருங்காற்று வந்து, அந்த வீட்டின் நாலு மூலையிலும் அடிக்க, அது பிள்ளைகளின் மேல் விழுந்ததினால் அவர்கள் இறந்து போனார்கள். (யோபு1:11-19)

இவ்வாறு ஒரேநாளில் யோபு தன் 10 பிள்ளைகளையும், மிருகஜீவன்களையும், பணியாட்களையும் இழந்தான். மேலும் சாத்தான் யோபுவை

“உள்ளங்கால் தொடங்கி அவன் உச்சந்தலை மட்டும் கொடிய பருக்கண்ணால் அவனை வாதித்தான்.

அவன் ஒரு ஓட்டை எடுத்து, தன்னைச் சுரண்டிக் கொண்டு சாம்பலில் உட்கார்ந்தான்.

அப்பொழுது அவன் மனைவி அவனைப் பார்த்து; நீர் இன்னும் உமது உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனைத் தூஷித்து ஜீவனை விடும் என்றாள்”. (யோபு2:7-9)

மேலும், “என் சிநேகிதர் என்னைப் பரியாசம் பண்ணுகிறார்கள், என் கண் தேவனை நோக்கிக் கண்ணீர் சொரிகிறது”. (யோபு 16:20)

“சிறுபிள்ளைகளும் என்னை அசட்டைப் பண்ணுகிறார்கள்”. (யோபு 19:18)

யோபு சாத்தானால் சோதிக்கப்படும் பொழுது தனது 10 பிள்ளைகளையும், அனைத்து உடைமைகளையும் இழந்தான். சரீரம் முழுவதும் பருக்களினால் நிறைந்து அவனை வேதனைப்படுத்தியது, மனைவி அவனைத் தூஷித்தாள், சிநேகிதர் அவனை பரியாசம் பண்ணி வெறுத்தார்கள், சிறுபிள்ளைகள் அவனை அசட்டைப் பண்ணினார்கள். அந்த நேரத்திலும் அவன் கர்த்தருடைய புடமிடுதலை உணர்ந்தான். ஆகவே, “வெள்ளிக்கு விளைவிடம் உண்டு, பொன்னுக்குப் புடமிடும் ஸ்தலமும் உண்டு” (யோபு 28:1) என்றான்.

இந்தச் சூழ்நிலையில் ... என் தாசனாகிய யோபு உங்களுக்காக வேண்டுதல் செய்வான். நான் அவன் முகத்தைப் பார்த்து உங்களை உங்கள் புத்தியீனத்துக்கு தக்கதாய் நடத்தாதிருப்பேன். என் தாசனாகிய யோபு பேசினது போல நீங்கள் என்னைக் குறித்து நிதானமாய்ப் பேசவில்லை.

...கர்த்தர் தங்களுக்கு சொன்னபடியே செய்தார்கள். அப்பொழுது கர்த்தர் யோபின் முகத்தைப் பார்த்தார்.

யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்த போது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். யோபுக்கு முன்னிருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத் தனையாய்க் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார். (யோபு 42: 8-10)

யோபு புடமிடப்படும் பொழுது அவன் அனைத்து உபத்திரவத்தின் மத்தியிலும் தன் சிநேகிதர்களுக்காக நிதானமாய் வேண்டுதல் செய்தான். கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றி அவனை இரட்டிப்பாய் ஆசீர்வதித்தார்.

பிரியமான சகோதர சகோதரியே உன் வாழ்க்கையில் குடும்பத்தினரை, உடைமைகளை இழந்து தவிக்கிறாயா, தீராத வியாதி உன்னை வாட்டுகிறதா, உன் உறவினர்களும், உன் சிநேகிதர்களும் உன்னை வெறுக்கிறார்களா? நீ கர்த்தரிடத்தில் வைத்திருக்கும் உத்தமத்தை விட்டு விலகாமல் உன் சிநேகிதருக்காக நிதானமாய் வேண்டுதல் செய். கர்த்தரின் விடுதலையும் ஆசீர்வாதத்தையும் காண்பாய்.

ஈ) தாவீதைப் புடமிட்டதைப் பாருங்கள் :

சிக்லாக்கை அமலேக்கியர் கொள்ளையடித்து

அக்கினியால் சுட்டெரித்து அங்கிருந்த ஸ்திரீகள் சிறியவர்கள் பெரியவர்கள் தாவீதின் இரண்டு மனைவிகள் அனைவரையும் சிறைபிடித்துச் சென்றனர். அதைக் கண்ட தாவீது அவனோடு இருந்த ஜனங்களும் மிகவும் அழுதார்கள்.

"தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்; சகல ஜனங்களும் தங்கள் குமாரர் குமாரத்திகளினிமித்தம் மனக்கிலேசமான தினால், அவனைக் கல்லெறிய வேண்டுமென்று சொல்லிக் கொண்டார்கள்; தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக் கொண்டான். (1சாமு. 30:6)

மேலும் கர்த்தரை நோக்கி நான் அந்தத் தண்டைப் பின் தொடர வேண்டுமா? அதைப் பிடிப்பேனா? என்று கேட்டான். அதற்கு அவர் அதைப் பின்தொடர் அதை நீ பிடித்து, சகலத்தையும் திருப்பிக் கொள்வாய் என்றார். அதன்படி தாவீது அந்தத் தண்டை பின்தொடர்ந்து சென்று இழந்த அனைத்தையும் பெற்றுக் கொண்டான். மேலும்,

"உன் தேவன் எங்கே என்று என் சத்துருக்கள் நாள்தோறும் என்னோடே சொல்லி, என்னை நிந்திப்பது என் எலும்புகளை உருவக் குத்துகிறது போல் இருக்கிறது".

"என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு; என் முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன்" (சங்கீதம் 42:10,11)

தாவீதோடிருந்தவர்களும், அவனுடைய சத்துருக் களும் அவனை நெருக்கினார்கள், நிந்தித்தார்கள். ஆனால் தாவீதோ தன் ஆத்துமாவில் கர்த்தருக்குள் திடப்படுத்தி, அவர் வழியை அறிந்து செயல்படுத்தி இரட்சிப்பைப் பெற்றான்.

பிரியமான சகோதர, சகோதரிகளே, உன்னோடு இருக்கிறவர்கள் நெருக்குகிறார்களா, உன் விரோதிகள் நீ கர்த்தரை நம்பியிருக்கிறாயே, கர்த்தருக்குப் பயந்து நடக்கிறாயே, எத்தனை நாள் உத்தமமாய் இருக்கப் போகிறாய், அதனால் தானே உனக்கு இத்தனைப் பாடுகள், உன் கர்த்தர் இன்னும் உன்னை விடுதலையாக்கவில்லையே என்று நகைக்கிறார்களா? உன் இருதயத்தை ஒருமுகப்படுத்தி கர்த்தரை நம்பி அவருக்குக்

காத்திரு. அவர் தமது வெளிச்சத்தை அனுப்பி உன்னை விடுவித்து கனப்படுத்துவார்.

உ) பவுலை புடமிட்டதைப் பாருங்கள் :

பவுல் விருத்தசேதனம் அடைந்தவன், இஸ்ரவேல் வம்சத்தான், எபிரெயன், பக்திவைராக்கியத்தின்படி சபையை துன்பப்படுத்தியவன், நியாயப்பிரமாணத்தின்படி குற்றம் சாட்டப்படாதவன். அவன் கிறிஸ்துவைப் பின்பற்றியவர்களை துன்பப்படுத்துவதற்காக பிரதான ஆசாரியரிடமிருந்து ஆணையைப் பெற்று அவன் தமஸ்குவுக்குச் செல்லும் போது,

"... சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது,

அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது : சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான்.

அதற்கு அவன், ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர் : நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே, முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார்.

அவன் நடுங்கித் திகைத்து : ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார். (அப். 9:3-6)

இயேசு கிறிஸ்துவுக்கு எதிர்த்து நின்ற பவுலை ஒரு சிறு வெளிச்சத்தை அனுப்பி கர்த்தர் அவனை புடமிட்டார். அவன் உடனே அவரை ஏற்றுக் கொண்டான். அவனைப் பரிசுத்த ஆவியினால் நிரப்பினார். அவன் சுவிசேஷத்தை அறிவிக்கும் பொழுது பாடுகளை அனுபவித்தான். இயேசுவின் அன்பினால் அவைகளை அவன் மேற்கொண்டான்.

பிரியமான சகோதர சகோதரிகளே இயேசு கிறிஸ்துவுக்கு எதிராய் நீ பேசுகிறாயா? இயேசுவை ஏற்றுக் கொண்டவர்களை நீ துன்பப்படுத்துகிறாயா? உன் பாடுகளை சுமக்க இயேசு அருகாமையிலே இருக்கிறார். அவரை முழுமையாய் ஏற்றுக் கொள். உன்னுடைய சுமைகள், கவலைகள் அனைத்தையும் அவர்

ஏற்றுக் கொள்ளுவார். நீ அவர் சுவிசேஷத்தை அறிவிக்கும் பொழுது எத்தனை பாடுகள் பட்டாலும் இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற அன்பு அவைகளை மறக்கச் செய்து உன்னை மகிழ்ச்சியாக்கும்.

என் வாழ்க்கையிலும் என்னைப் புடமிட்ட தேவன் :

1989 ஆம் ஆண்டு நான் பேராசிரியராக பணிபுரியும் பொழுது நான் செய்யாத தவறு ஒன்றை நான் செய்ததாக எண்ணப்பட்டேன். அப்பொழுது என்னோடு இருந்த நண்பர்கள் ஓரளவு உதவி செய்த போதிலும் என் மீதிருந்த தவறான எண்ணத்தை மாற்ற முடியவில்லை. பணி செய்யுமிடத்தில் எப்பகுதியிலும் நெருக்கப்பட்டேன். அப்பொழுது விருப்பஓய்வு கொடுத்துவிடலாம் என்று எண்ணினேன். நான் பேசாமல் இருப்பதைக் கண்ட என் மனைவி பிள்ளைகள் மிகவும் பாதிக்கப்பட்டார்கள். தேவனாகிய கர்த்தர் ஒருவரையே நம்பி வாழ்ந்து வந்தேன். கர்த்தர் என்னை தனிமையாக்கி இவ்வுலகில் மனிதர்களைச் சார்ந்திராதபடி கர்த்தரையே நம்பி வாழ என்னைப் புடமிட்டார் என்பதை உணர்ந்தேன்.

அந்த சமயத்தில் நானும் என் மனைவியும் எங்களுடைய இரண்டு பெண்பிள்ளைகளும் சென்னைக்குச் சென்று சகோ. **D.G.S. தினகரன்** அவர்களை சந்தித்து என் நிலமையைக் கூறி அவர்களிடம் நான் விருப்பஓய்வு கொடுத்து விடலாம் என்று எண்ணுகிறேன் என்றேன். அப்பொழுது அவர்கள் ஜெபித்து,

"I send an angel of God with you. No body will touch you, யார் உன்னை resign பண்ணு என்று சொல்கிறார்களோ, அவர்களே resign பண்ணுவார்கள், ஆகவே உடனே நீ போய் join பண்ணு என்றார்கள்

தேவனாகிய கர்த்தர் அவர்கள் மூலமாய் அருளிய வாக்குகள் இன்றும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. கர்த்தருடைய வாக்கின்படி நான் என் பணியிலே சேர்ந்தேன். அதன்பின் கர்த்தர் ஒருவரையே நம்பி வாழ ஆரம்பித்தேன். தேவனாகிய கர்த்தர் 2006ஆம் ஆண்டு நான் ஓய்வு பெறும் வரை எவ்வித இடையூறுமின்றி அவருடைய பணியையும் அங்கே அவர் தந்த ஊழியத்தையும் வெற்றியோடு செய்யச் செய்தார்.

அடுத்து எனது மூத்த மகளுடைய வாழ்க்கையைப் புடமிட்டார். கர்த்தருடைய வாக்குப்படி **1999 ஆம் ஆண்டு செப்டம்பர் 30ஆம் தேதி** எனது மூத்த மகளுக்கு திரு. **J.ஜோசப் தங்கசாமி** அவர்களோடு கர்த்தருடைய சந்நிதானத்தில் திருமணம் நடந்தது. கர்த்தருடைய பெரிதான கிருபையால் அவள் கர்ப்பந்தரித்தபடியினால் முதலாம் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு நாங்கள் மும்பைக்கு செல்ல வேண்டியிருந்தது. டிசம்பர் 24ஆம் தேதி இரவு 11.00 மணிக்கு நாங்கள் மும்பை சென்றடைந்தோம். எங்களை நேரடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கே என் மகளுக்கு கருச்சிதைவு ஏற்பட்டதைக் கண்டு மிகுந்த அதிர்ச்சியோடு கலங்கினோம். என் மகளையும் என் மனைவியையும் என்னால் தேற்றமுடியவில்லை. என் மனைவி ஒரு மருத்துவரா யிருந்தாலும் தனது மகளுக்கு உதவி செய்து அக்குழந்தையைக் காப்பாற்ற முடியவில்லையே என மிகவும் கலங்கினாள். காலங்கள் சென்றது. ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் கழித்து திரும்பவும் என் மூத்த மகள் கர்ப்பம் தரித்தாள். ஐந்தாம் மாதத்தில் மறுபடியும் கருச்சிதைவு ஏற்பட்டது. எத்தனை துயரம், எத்தனை பாடுகள், எத்தனை நிந்தைகள்.

அச்சமயம் எனது மகள் அப்பா எனக்கு குழந்தை இருக்குமா என்று அழுவாள். நான் சொல்லுகிற ஒரே வார்த்தை நான் நம்பியிருக்கிற கர்த்தர் நிச்சயம் உனக்கு ஒரு குழந்தையைத் தருவார். தேவனாகிய கர்த்தர் எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டு **2005 பிப்ரவரி 4ஆம் தேதி** ஒரு அருமையான பெண் குழந்தையைத் **(Priscilla Jovan)** தந்து ஆசீர்வதித்தார்.

மேலும் 1989ஆம் அண்டு அக்டோபர் மாதம் 19ஆம் தேதி தேவனாகிய கர்த்தர் என் வாழ்க்கையில் பெரிய அற்புதத்தைச் செய்தார். அன்று நான் மிகவும் ஜுரத்தால் பாதிக்கப்பட்டேன், பலவீனமாயிருந்தேன். குடும்ப நண்பர்களான மருத்துவ தம்பதிகள் என்னைப் பார்த்து விட்டு சில ஆண்டுகளாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்த Bactrim D.S என்ற மாத்திரையைச் சாப்பிடச் சொன்னார்கள். குடும்ப ஜெபம் செய்துவிட்டு இரவு 10 மணியளவில் மாத்திரை சாப்பிட்டவுடன்

தொண்டையெல்லாம் சகப்பு ஏற்பட்டது. உடலில் தடிப்பு பல இடங்களில் வந்தது. கண் தெரியவில்லை. முகம் வீங்கியது. கண்கள் இருளடைந்து பார்வையற்றவனா யிருந்தேன். இருதயத் துடிப்பு படிப்படியாக குறைவதை உணர்ந்தேன். இதைக் கண்ட என் மனைவி உடனே டெக்கட்ரான் இன்ஞ்சக்ஸன் போட்டார்கள். எனக்கு மூச்சு நின்று போயிற்று. இந்தநிலையில் என் மனைவியும் என் தாயாரும் என் இரண்டு பெண் பிள்ளைகளும் என்னை மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். கர்த்தரிடத்தில் மிகவும் கண்ணீரோடு ஜெபித்தார்கள். மருத்துவமனையில் உடனடியாக சிகிச்சை கொடுக்கப்பட்டது. கர்த்தர் அவர்கள் ஜெபத்தைக் கேட்டு தகுந்த சிகிச்சை தந்து என்னை உயிர்ப்பித்தார். அன்றிலிருந்து இயேசு கிறிஸ்துவுக்காகவே நான் வாழ விரும்பினேன்.

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே உங்கள் வாழ்க்கையில் திருமணமாகி குழந்தையில்லாமல் நிந்திக்கப்படுகிறீர்களா, கருச்சிரைவு ஏற்பட்டு கவலையில் ஆழ்ந்திருக்கிறீர்களா? பணிசெய்யுமிடத்தில் முகாந்திரம் இல்லாமல் நிந்திக்கப்படுகிறீர்களா? இவ்வுலகில் எனக்கு எவரும் இல்லை நான் தனிமையாயிருக்கிறேன் என்று கலங்குகிறீர்களா? தேவனாகிய கர்த்தரைச் சார்ந்து நின்று உங்களைப் புடமிட ஒப்புக் கொடுங்கள். தாவீது போல

“தேவனே எங்களைச் சோதித்து, வெள்ளியைப் புடமிடுகிறது போல எங்களை புடமிட்டீர்” (சங். 66:10) என்று மிகுந்த தைரியமாய் துதித்து அதனால் வரும் மேன்மைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள். கர்த்தர் உங்களை பொன்னாய் விளங்கச் செய்வார். அவர் மகிமை உங்கள் மேல் எப்பொழுதும் வீசும். உங்களைக் கர்த்தர் ஜொலிக்கப் பண்ணுவார். அல்லேலூயா!

5. தேவ சித்தத்தை அறிய செய்யும் தேவன்

தேவனாகிய கர்த்தர் தம் பிள்ளைகளை முன்குறித்து அழைத்து, வழிநடத்தி, புடமிட்டு தேவசித்தத்தை அவர்கள் அறியச் செய்கிறார்.

"என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பின வருடைய சித்தத்தின்படிச் செய்யவே நான் வானத்தி லிருந்திறங்கி வந்தேன்". (யோவான் 6:38)

"இயேசு அவர்களை நோக்கி : நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமாயிருக்கிறது". (யோவான் 4:34)

"நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்". (1 யோவான் 5:14)

"உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென் றைக்கும் நிலைத்திருப்பான்". (1 யோவான் 2:17)

"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படிச் செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானே யல்லாமல், என்னை நோக்கி : கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை". (மத்தேயு 7:21)

மேற்கூறிய வசனங்களை கவனித்துப் பாருங்கள். எதற்காக தேவ சித்தத்தை கர்த்தர் அறியச் செய்கிறார்.

1. பிதாவின் சித்தத்தைச் செய்யவே இயேசு கிறிஸ்து இவ்வுலகில் மனுஷகுமாரனாய்ப் பிறந்து வாழ்ந்தார். அவருடைய சித்தத்தைச் செய்து முடிப்பது அவருடைய போஜனமாயிருந்தது. ஆகவே இவ்வுலகில் நாம் ஒவ்வொருவரும் தேவசித்தத்தைச் செய்யும்படியாகவே நமக்கு வாழ்க்கையைத் தந்திருக்கிறார்.

2. தேவ சித்தத்தின்படி எதைக் கேட்டாலும் கர்த்தர் அதற்குச் செவிகொடுத்து அதற்கு பதிலளிக்கிறார். ஆகவே நாம் எதைக் கேட்டு விண்ணப்பம் பண்ணினாலும் தேவ

சித்தத்தின்படி விண்ணப்பம் பண்ணும்போது அதற்குக் கர்த்தர் பதிலளிக்கிறார்.

3. நிலையற்ற உலகில் நாம் நிலையாய் வாழ்வதற்கு தேவ சித்தத்தைச் செய்ய வேண்டும்.

4. தேவ சித்தத்தைச் செய்து முடித்தவர்களே பரலோக ராஜ்யம் செல்லமுடியும்.

இவைகள் ஒவ்வொன்றையும் தனது ஜனம் அனுபவிக்க வேண்டும் என்பதற்காக கர்த்தர் தேவ சித்தத்தை தம் பிள்ளைகள் அறிந்து செயல்படுத்துகிறார்.

அ) ஆபிரகாம் தன் மகனாகிய ஈசாக்குக்கு தேவ சித்தத்தின்படி விவாகம் பண்ண எண்ணினான் :

ஆகவே தன் வீட்டிலுள்ள மூத்த ஊழியக்காரனாகிய எலியேசரை நோக்கி :

“நான் குடியிருக்கிற கானானியருடைய குமாரத்திகளில் நீ என் குமாரனுக்குப் பெண் கொள்ளாமல், நீ என் தேசத்துக்கும் என் இனத்தாரிடத்துக்கும் போய், என் குமாரனாகிய ஈசாக்குக்குப் பெண் கொள்வேன் என்று வானத்துக்குத் தேவனும் பூமிக்குத் தேவனுமாகிய கர்த்தரின் பேரில் எனக்கு ஆணையிட்டுக் கொடுக்கும்படிக்கு, நீ உன் கையை என் தொடையின் கீழ் வை என்றான்.

அதற்கு அந்த ஊழியக்காரன் : அவ்விடத்துப் பெண் என் பின்னே இந்தத் தேசத்துக்கு வர மனதில்லாதிருந்தால், நீர் விட்டு வந்த தேசத்திற்குத்தானே உம்முடைய குமாரனை மறுபடியும் அழைத்துப் போகவேண்டுமோ என்று கேட்டான்.

அதற்கு ஆபிரகாம் : நீ என் குமாரனை மறுபடியும் அங்கே அழைத்துக் கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. என்னை என் தகப்பனுடைய வீட்டிலும் என் இனத்தார் இருக்கிற தேசத்திலுமிருந்து அழைத்து வந்தவரும், உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைத் தருவேன் என்று எனக்குச் சொல்லி ஆணையிட்டவருமான வானத்துக்குத் தேவனாகிய கர்த்தர், நீ அங்கேயிருந்து என் குமாரனுக்கு ஒரு பெண்ணைக் கொண்டு வரும்படிக்கு, தம்முடைய தூதனை உனக்கு முன்பாக அனுப்புவார்”. (ஆதி. 24:3-7)

எலிசேயர் கர்த்தருக்குப் பயந்து நடந்தபடியால் தேவசித்தத்தை அறிந்து ஈசாக்குக்கு பெண்கொள்ள விரும்பினான். அப்பொழுது.

"என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தேவனாயிருக்கிற கர்த்தாவே, இன்றைக்கு நீர் எனக்கு காரியம் சித்திக்கப்பண்ணி, என் எஜமானாகிய ஆபிரகாமுக்குத் தயவு செய்தருளும்".

இதோ நான் இந்தத் தண்ணீர் துரவண்டையிலே நிற்கிறேன், இந்த ஊராருடைய பெண்கள் தண்ணீர் மொள்ள புறப்பட்டு வருவார்களே. நான் குடிக்க உன் குடத்தைச் சாய்க்க வேண்டும் என்று நான் சொல்லும் போது : குடி என்றும், உன் ஒட்டகங்களும் குடிக்கும்படி வார்ப்பேன் என்றும் சொல்லும் பெண் எவளோ, அவளே நீர் உம்முடைய ஊழியக்காரனாகிய ஈசாக்குக்கு நியமித்தவளாயிருக்கவும், என் எஜமானுக்கு அநுக்கிரகம் செய்தீர் என்று நான் அதினாலே அறியவும் செய்தருளும் என்றான்". (ஆதி. 24:12-14)

இவ்வாறு அவன் சொன்னவுடன் ரெபெக்காள் அவனுக்கும் அவன் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் கொடுப்பேன் என்று எலியேசர் தண்ணீர் கேட்டவுடன் சொன்னாள். உடனே அவளைத் தெரிந்து கொண்டு கானான் தேசத்துக்கு அழைத்து வந்தான். நடந்தவைகளை ஈசாக்குக்கு கூறினான். ஈசாக்கு அதற்கு மாறுத்தரம் ஒன்றும் சொல்லாமல் அவளை தனக்கு மனைவியாக்கிக் கொண்டு அவளை நேசித்தான். ஈசாக்கு தன் தாய்க்காகக் கொண்டிருந்த துக்கம் நீங்கி ஆறுதல் அடைந்தான்.

ஆ) தாவீதின் வாழ்க்கையைப் பாருங்கள் :

அவன் தேவசித்தத்தை அறிந்து செயல்பட்டான். ஆகவே அவன் "உமக்குப் பிரியமானதைச் செய்ய எனக்குப் போதித்தருளும், நீரே என் தேவன்; உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக". (சங்.143:10) என்று கர்த்தரிடத்தில் வேண்டினான். இதை அறிந்த தேவனாகிய கர்த்தர்.

"பின்பு அவர் அவனைத் தள்ளி, தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தி, ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன், எனக்குச்

சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான் என்று அவனைக் குறித்துச் சாட்சியுங் கொடுத்தார்". (அப்.13:22).

தாவீதின் இருதயம் தேவ சித்தத்தைச் செய்ய எப்பொழுதும் விரும்பியது. அவன் தேவனுடைய ஆலயத்தை மிகவும் வாஞ்சித்தான். அவருக்கு தேவாலயத்தைக் கட்ட விரும்பினான். ஆனால் தேவனாகிய கர்த்தரோ அவனுக்கு ஒரு வீட்டை உண்டுபண்ண சித்தங் கொண்டார். மேலும் அவனுடைய மகனாகிய சாலொமோனை கர்த்தர் தெரிந்தெடுத்து அவர் நாமத்துக்கென்று தேவாலயத்தைக் கட்ட திட்டம் பண்ணியதை தாவீதுக்கு அறிவித்தார். அப்பொழுது தாவீது, "உனக்கு வீடு கட்டுவேன் என்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தராயிருக்கிற நீர் உமது அடியானின் செவிக்கு வெளிப்படுத்தினீர்; ஆகையால் உம்மை நோக்கி இந்த விண்ணப்பத்தைச் செய்ய உமது அடியானுக்கு மனதைரியம் கிடைத்தது".

"இப்போதும் உமது அடியானின் வீடு என்றைக்கும் உமக்கு முன்பாக இருக்கும்படி அதை ஆசீர்வதித்தருளும்; கர்த்தரான ஆண்டவராகிய தேவரீர் அதைச் சொன்னீர், தம்முடைய ஆசீர்வாதத்தினாலே உமது அடியானின் வீடு என்றைக்கும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பதாக". (2சாமு. 7:27,29) என்றான்.

மேலும் பெலிஸ்தியர் இஸ்ரவேல் மக்களை தாக்க வந்த போது, "தாவீது கர்த்தரிடத்தில் விசாரித்ததற்கு, அவர்: நீ நேராய்ப் போகாமல், அவர்களுக்குப் பின்னாலே சுற்றி, முசுக்கட்டைச் செடிகளுக்கு எதிரேயிருந்து, அவர்கள்மேல் பாய்ந்து, முசுக்கட்டைச் செடிகளின் நுனிகளிலே செல்லுகிற இரைச்சலை நீ கேட்கும் போது, சீக்கிரமாய் எழும்பிப் போ; அப்பொழுது பெலிஸ்தரின் பாளையத்தை முறிய அடிக்க, கர்த்தர் உனக்கு முன்பாகப் புறப்பட்டிருப்பார் என்றார்".

கர்த்தர் தாவீதுக்குக் கட்டளையிட்டபிரகாரம் அவன் செய்து, பெலிஸ்தரைக் கேபா துவக்கிக் கேசேர் எல்லை மட்டும் முறிய அடித்தான். (2சாமு. 5:20-25). இவ்வாறு தாவீது தான் வீடு கட்டவும், இஸ்ரவேல் மக்களை வழி நடத்தவும் அவனுக்கு

எதிராய் எழுந்த யுத்தங்களின் சமயங்களிலும் தேவனாகிய கர்த்தருடைய சித்தத்தை அறிந்து அவருடைய ஆலோசனைகளை ஏற்று அவர் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடந்தான். கர்த்தர் அவனுக்கு பூரண ஆசீர்வாதத்தைத் தந்தார். மேலும், "தாவீது தன் காலத்திலே தேவனுடைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியஞ்செய்த பின்பு நித்திரையடைந்து, தன் பிதாக்களிடத்திலே சேர்க்கப்பட்டான்". (அப். 13:36)

தாவீது தேவ சித்தத்தை அனுதினமும் அறிந்து அதைச் செயல்படுத்தியதைக் குறித்து தேவனாகிய கர்த்தரே சாட்சி கொடுத்தார்.

இ) பவுலுடைய வாழ்க்கையைப் பாருங்கள் :

கர்த்தர் பவுலை அவருடைய சித்தத்தை அறியச் செய்தார். கிறிஸ்துவைப் பின்பற்றியவர்களைத் துன்புறுத்திய பவுலை இயேசு கிறிஸ்து சந்தித்தார். முள்ளில் உதைப்பது உனக்குக் கடினமாம் என்றார். உடனே பவுல் ஆண்டவரே நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். "அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும்" என்றார்.

"அவனுடனே கூடப் பிரயாணம் பண்ணின மனுஷர்கள் சத்தத்தைக் கேட்டும் ஒருவரையுங் காணாமல் பிரமித்து நின்றார்கள்". "சவுல் தரையிலிருந்தெழுந்து, தன் கண்களைத் திறந்த போது ஒருவரையுங் காணவில்லை. அப்பொழுது கைலாகு கொடுத்து, அவனைத் தமஸ்குவுக்குக் கூட்டிக் கொண்டு போனார்கள்". "அவன் மூன்று நாள் பார்வையில்லாதவனாய்ப் புசியாமலும் குடியாமலும் இருந்தான்". (அப். 9:6-9)

மேற்கூறிய வசனங்களை கவனித்துப் பாருங்கள். பவுல் தன்னை முழுமையாய்க் கர்த்தருக்கு ஒப்புவித்து அவருடைய சித்தத்தை அறிய விரும்பும்போது உடனடியாய் அவருடைய சித்தம் இன்னதென்று அவனுக்கு அவர் அறிவிக்கவில்லை. அவன் தன்னை கர்த்தருக்கு ஒப்புவித்த பின்பு பட்ட பாடுகளைப் பாருங்கள். 1. மூன்று நாள் கண் தெரியாமலிருந்தான். 2. அவனை கைலாகுக் கொடுத்து தமஸ்குவுக்கு அழைத்துச் சென்றனர். 3. புசியாமலும் குடியாமலும் கர்த்தரிடத்தில் ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான்.

மேலும் கர்த்தர் அனனியாவுக்குத் தரிசனமாகி பவுல் மூலமாய் தேவன் செய்யப் போகும் அவருடைய சித்தத்தை வெளிப்படுத்தி அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான். அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண்டு மென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன். அனனியாவை பவுலின் மேல் கையை வைத்து ஜெபிக்கச் செய்தார். அவன் ஜெபித்தபோது கர்த்தர் அவனை பரிசுத்த ஆவியினால் நிரப்பினார். கண்கள் பார்வையடையச் செய்தார். ஞானஸ்நானம் பெற்று போஜனம் பண்ணி, பலப்பட்டு சீஷர்களோடு சில நாள் தங்கி தாமதமின்றி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று ஆலயங்களிலே பிரசங்கித்தான். இத்தனை பாடுகளைக் கடந்து சென்று கர்த்தரின் சித்தத்தை அறிந்து பவுல் சுவிசேஷத்தை அறிவித்தான்.

அதே சமயத்தில் தேவசித்தத்தின்படி அவன் ஊழியம் செய்ய ஆரம்பித்தவுடன். "கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக் கிறேன்".

"ஆகிலும் அவைகளில் ஒன்றையுங் குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்". (அப்.20:23,24).

ஆகவே ஒவ்வொரு பட்டணந்தோறும் சுவிசேஷத்தை அவன் அறிவிக்கும் போதும் அவன் பாடுகளையும் உபத்திரவங்களையும் சந்திக்க நேர்ந்தது. அவன் பாடுகளை அனுபவித்த விதங்களைப் பாருங்கள்.

"அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா? நான் அதிகம்; புத்தியீனமாய்ப் பேசுகிறேன், நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன்.

யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்து தரம் அடிபட்டேன்;

மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன்.

அநேகந்தரம் பிரயாணம் பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும், கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுய ஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச் சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும்;

பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன்". (2கொரி.11:23-27).

இத்தனை பாடுகளும் பவுல் எதற்காக அனுபவித்தான் தேவசித்தத்தின்படி சுவிசேஷத்தை அறிவிக்கும் பொழுது இத்தனை பாடுகளையும் மிகுந்த மகிழ்ச்சியோடு கடந்து சென்றான். கிறிஸ்துவின் அன்பு தேவசித்தத்தையே நிறைவேற்ற பவுலைத் துண்டியது.

என் வாழ்க்கையில் கர்த்தர் தேவசித்தத்தை அறியச் செய்தார் :

நான் என் வாழ்க்கையில் தேவசித்தத்தை அறிந்து செயல்பட மிகவும் வாஞ்சித்தேன். ஒவ்வொரு காரியத்திலும் தேவனுடைய சித்தம் என்ன என்பதை அறிய கர்த்தரை நோக்கி விண்ணப்பம் செய்தேன்.

1. **வீடு :**

எங்களுக்கென்று ஒரு வீடு வேண்டுமென்று நான் கர்த்தரிடம் ஜெபித்தேன். ஒரு குறிப்பிட்ட தொகையை கையில் வைத்துக் கொண்டு கட்டிய வீடு ஒன்றை விலைக்கு வாங்க 1983 ஆம் ஆண்டிலிருந்து 1985 ஆம் ஆணடு வரை அலைந்து தேடிவந்தேன். அதேசமயத்தில் வீட்டுக்காக நாங்கள் ஜெபிக்கும் போதெல்லாம் நீ வீடு கட்டுவாய் என்று கர்த்தர் வாக்களித்தார். நானோ வீடு கட்டமாட்டேன் என்னால் நின்று பார்க்கமுடியாது. வீட்டை வாங்கத்தான் செய்வேன் என்று பிடிவாதமாய் அலைந்து திரிந்தேன். இரண்டு ஆண்டுகள் கழித்து மிகக் கவலையோடு சகோதரி. **பேராசிரியை திருமதி. சந்திரா பாஸ்கர்** அவர்களோடு ஜெபம் பண்ணினோம் கர்த்தர் அவர்கள் மூலமாய் கட்டப்படும் நிலத்தைக் குறித்தும் வீட்டைக் குறித்தும் வீட்டிலுள்ள சாமான்களைக் குறித்தும் மிகத்தெளிவாக தரிசனத்தில் வெளிப்படுத்திக் காட்டினார். உடனே கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து வீடுகளில்லாத இடத்தில் ஒரு நிலத்தை வாங்கி கர்த்தர் வீடு கட்டச் செய்தார். ஆரம்பகாலத்தில் அந்த இடம் போக்குவரத்து வசதியில்லாமலும், ஆட்கள் நடமாட்டம் இல்லாமலும், மழைக் காலத்தில் வெள்ளம் சூழ்ந்து கொள்ளும் ஒரு இடமாகவும் வாழ்க்கை பாதிக்கப்படும். இயல்பான இருந்தபோதிலும் கர்த்தருடைய சித்தத்தின்படி கட்டிய வீட்டில் பெரிய ஆசீர்வாதங்களைத் தந்தார்.

அந்த வீடு ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த, மிஷனெரிகள் பிரதிஷ்டை செய்யப்பட, சகோ. D.G.S.**தினகரன்** அவர்கள் குடும்பத்தினர் அனைவரும், சகோ. **மோகன் சி. லாசரஸ்**, சகோ. **எபனேசர் பால்**, சகோ. S.P.L.**ராஜ்குமார்**, சகோ. **தேவதாஸ்** (ஷாலோம்) மற்றும் அநேக தேவதாசர்கள் கூட்டங்கள் நடத்தியும், ஜெபித்தும் ஆத்துமாக்கள் ஆதாயப்படவும், கர்த்தருடைய நன்மைகளை பல குடும்பத்தினர் பெற்றுச் செல்லவும், இயேசு கிறிஸ்துவின் நாமம் என்றும் மகிமைப்பட, உலகப்பிரகாரமாய் இப்பகுதி மிகவும் முக்கியமான பகுதிகளில் ஒன்றாகவும் கர்த்தர் ஆசீர்வதித்திருக்கிறார். தேவனுக்கு மகிமை உண்டாவதாக!

2. திருமணம் :

தேவசித்தத்தின்படி என் இரண்டு மகளுடைய திருமணங்களையும் தேவன் நடத்தித் தந்தார். இரண்டாவது மகளுக்குத் திருமணத்திற்காய் காத்திருக்கும் பொழுது நானும் என் மனைவியும் கர்த்தாவே இந்த் திருமணத்தை உமது சித்தத்தின்படியே நடத்தித் தாரும் என்று முழுஇருதயத்தோடு வாஞ்சித்து ஜெபம் செய்தோம். கர்த்தர் நடத்திய விதத்தைப் பாருங்கள். நாங்கள் ஜெபித்துக் கொண்டிருக்கும் பொழுது எங்கள் இரண்டாவது மருமகன் திரு. **ஜோசப் எட்வர்ட்** அவர்களின் அக்கா திருமதி. **ராணி சார்ல்ஸ்** அவர்கள் மூலம் திருமண proposal வந்தது. அதை D.G.S.**தினகரன்** அவர்களுக்கு நாங்கள் தெரிவித்து தேவசித்தத்தை அறிந்து கொள்ள விரும்பினோம்.

அப்பொழுது அவர்கள் பெண்ணும் மாப்பிள்ளையும் பார்த்து சம்மதம் தெரிவிக்கட்டும், இரண்டு பேருடைய பெற்றோர்களும் சம்மதம் தெரிவித்தபின்பு உடனே எனக்குத் தெரிவியுங்கள் என்றார். நான் ஜெபித்து அது தேவனுடைய சித்தமா என்பதை அறிந்து தெரிவிக்கிறேன் என்று கூறினார்கள். அவ்வாறே நாங்கள் செய்தோம். அப்பொழுது அவர்கள் ஆஸ்திரேலியாவில் வல்லமை ஊழியம் (Power Ministry) நடத்திக் கெண்டிருந்தார்கள். நாங்கள் தெரிவித்தவுடன் அங்கிருந்து அவர்கள் ஜெபித்து தேவசித்தத்தையும் அவர்களின் பிற்கால வாழ்க்கையையும் தெளிவாய் எடுத்துக்கூறி தேவசித்தத்தை தெளிவாய் வெளிப்படுத்திக் காட்டினார்கள். கர்த்தருடைய சித்தத்தின்படியே **2003ஆம் ஆண்டு ஜூன் 6ஆம் தேதி** கர்த்தருடைய சந்நிதானத்தில் என் மகள் **C.சுகன்யாவும்** எனது இரண்டாவது மருமகன் திரு. **C.ஜோசப் எட்வர்ட்** அவர்களும் திருமணத்தில் இணைக்கப்பட்டனர். பின்பு சென்னையில் நடந்த வரவேற்பு கூட்டத்தில் சகோ. D.G.S.**தினகரன்,** சகோ. **பால் தினகரன்** மற்றும் அவர்கள் குடும்பத்தினர் பங்குபெற்று கர்த்தருடைய செய்தியை அருளி மணமக்களை வாழ்த்தினர். அப்பொழுது

D.G.S.தினகரன் புதுமணத் தம்பதிகள் மூலமாய் தேவசித்தம் எவ்வாறு நடைபெறப் போகிறது என்பதை கர்த்தர் வெளிப்படுத்தினார். தேவனாகிய கர்த்தர் அவர்களுக்கு அருமையான ஒரு ஆண் குழந்தையை. **J. Samuel Hanley Lincoln**-யைத் தந்து ஆசீர்வதித்திருக்கிறார். அனைத்து கனமும் மகிமையும் கிறிஸ்துவுக்கே உண்டாவதாக. அல்லேலூயா.

3. படிப்பில் :

ஒவ்வொரு பிள்ளைகளுடைய வாழ்க்கையில் படிப்பிலும், பணியிலும் தேவசித்தத்தை அறிந்து செயல்படுவது மிகவும் அவசியம்.

எனது மூத்த மருமகன் திரு. **J.ஜோசப் தங்கசாமி** அவர்கள் Charted Account (C.A.)இல் இறுதித் தேர்வில் தேர்ச்சி பெற மிகவும் கஷ்டப்பட்டார்கள். மும்பையில் பணி செய்து கொண்டு எவ்வளவு கஷ்டப்பட்டு படித்தாலும் ஒரு தேர்வில் வெற்றிபெறுவது கடினமாயிருந்தது. நான்கு ஐந்து முறை எழுதி சோர்வுற்று.C.A.யை விட்டுவிட்டு கம்ப்யூட்டர் படிப்புகளுக்குப் போய்விடலாம் என்று எண்ணினார்கள். அந்த சமயம் அவருடைய மனைவி என் மூத்த மகள் **C.லாவண்யா** சகோ. **D.G.S.தினகரனிடம்** தன் கணவரின் படிப்புக்காக ஜெபம் பண்ணச் சொன்னாள். அவர்கள் ஜெபித்தார்கள். கர்த்தர், என் மருமகனை **சேலத்தை தேர்வு மையமாகக் கொண்டு** தேர்வு எழுதச் சொல், உடனே வெற்றி பெறுவார்கள், என்று கர்த்தர் அவர்கள் மூலமாய் வெளிப்படுத்திக் காட்டினார். மும்பையில் வீட்டுக்கு அருகாமையிலே தேர்வுமையம் இருக்கும் பொழுது முன்பின் தெரியாத சேலத்துக்கு வருவது என அவர் தயங்கினாலும் கர்த்தருடைய சித்தத்துக்குக் கீழ்ப்படிந்து சேலம் மையத்தை தேர்ந்தெடுத்து அங்கே தேர்வு எழுதினார்கள். எத்தனை ஆச்சரியம். அதற்காக அவர்கள் அதிக சிரமப்பட்டு படிக்கவில்லை. பொதுவாக படிப்பது போல படித்தார். ஏற்கனவே எந்தப் பாடத் தேர்வில் குறைவான மதிப்பெண்கள் பெற்றார்களோ அதே பாட தேர்வில் அதிகமான மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெற்றார்கள். கர்த்தருக்கே ஸ்தோத்திரம்.

4. பணியில் :

அடுத்து பணியில் சேருவதற்கு முன் தேவ சித்தத்தை அறிந்து சேர வேண்டும்.

எனது மூத்த மருமகன் மும்பையில் ஒரு கம்பெனியில் பணி செய்து கொண்டு வரும்பொழுது கர்த்தர் அற்புதமாய். C.A.பாஸ் பண்ணச் செய்தார். அதன்பின்பு பல இடங்களுக்கும் நேர்காணலுக்கு அழைப்பு (Interview) வந்தது. அதில் ஒரு சிலவற்றில் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பொழுது எந்தப்பணியில் சேருவது தேவசித்தம் என்ன என்பதை அறியாதிருந்தார். உடனே அவர் **D.G.S.தினகரன்** அவரிடம் தெரிவித்து ஜெபிக்கச் சொன்னார். அதற்கு சகோதரர் ஜெபித்து **தொலைபேசியின் மூலமாய் இண்டர்விரூ பண்ணி தேர்வு செய்யப்படுகிற கம்பெனியில்** சேரும்படி கர்த்தர் அவர்கள் மூலமாய் தெரிவித்தார். கர்த்தரின் வார்த்தையின்படி கீழ்ப்படிந்து ஆஸ்திரேலியாவுக்கு அருகாமையில் உள்ள **பாப்புவா நியூகினியா** என்ற இடத்தில் பணியில் சேரச் செய்தார். அது மிகுந்த தூரமாய் இருந்தாலும் கர்த்தருடைய சித்தத்துக்கு கீழ்ப்படிந்து நடந்தார்கள். இரண்டு ஆண்டுகள் அங்கே குடும்பமாய் இருந்து பணி செய்ய தேவன் கிருபை புரிந்தார். அது கர்த்தருடைய கனத்தைப் பெற்றுக் கொள்ள உதவியது.

பிரியமான சகோதர சகோதரியே என் வாழ்க்கையில் திருமணத்தில், வீடுகட்டுவதில், பிள்ளைகள் படிப்பில், பணியில், ஊழியத்தில் எல்லாவற்றிலும் தேவசித்தத்தை அறிந்து செயல்பட்டேன். உபத்திரவங்கள் மத்தியிலும் கர்த்தர் அனைத்தையும் ஆசீர்வதித்து தேவ சமாதானத்தோடு வாழச் செய்திருக்கிறார். ஆகவே, நீயும் உன்னுடைய வாழ்க்கையிலும் எதையும் செய்வதற்கு முன்பாக தேவ சித்தத்தை வாஞ்சித்து கர்த்தரிடமிருந்து அதை அறிந்து கொள். அவைகள் உனக்கு வாழ்வில் எல்லாவற்றிலும் நிலையான சந்தோஷத்தைத் தந்து தேவனுடைய ராஜ்யம் கட்டப்படும். அல்லேலூயா!

---

௬. ஊழியத்தைத் தரும் தேவன்

தேவனாகிய கர்த்தர் தம் ஜனங்களை முன்குறித்து அழைத்து அவர்களை வழிநடத்தி தேவசித்தத்தை அறியச் செய்து ஒவ்வொருவருக்கும் அவர்களுக்காக நியமிக்கப்பட்ட ஊழியத்தைத் தருகிறார். அனைவரும் ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த சுவிசேஷத்தை பிரசங்கிக்கச் செய்கிறார்.

1. யோவான்ஸ்நானன் பிரசங்கித்ததைப் பாருங்கள் :

"மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று பிரசங்கம் பண்ணினான். (மத். 3:2)

2. இயேசுகிறிஸ்து பிரசங்கித்ததைப் பாருங்கள் :

"அதுமுதல் இயேசு : மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது" என்று பிரசங்கிக்கத் தொடங்கினார். (மத். 4:17)

3. பன்னிரெண்டு சீஷர்களையும் இயேசு அழைத்து :

போகையில், பரலோகராஜ்யம் சமீபமாயிருக்கிறது என்று பிரசங்கியுங்கள் என்றார்.

இவ்வாறு தேவனாகிய கர்த்தர் தம் ஜனம் எதைப் பிரசங்கிக்க வேண்டுமென்று விரும்புகிறாரோ, அந்த ஊழியத்தை அவர்களுக்குத் தந்து போதிக்கச் செய்தார். இன்றும் எல்லா ஊழியக்காரர்களையும் பாருங்கள். இதை அடிப்படையாக வைத்துதான் ஊழியத்தைச் செய்கிறார்கள்.

ஆனால் ஊழியங்களில் வித்தியாசம் உண்டு. யார் யாருக்கு எந்த ஊழியம் தர வேண்டுமென்று தேவனாகிய கர்த்தர் திட்டம் பண்ணியிருக்கிறார்.

அ) பேதுருவின் ஊழியத்தைப் பாருங்கள் :

இயேசு உயிர்த்தெழுந்த பின்பு தன் சீஷர்களுக்குத் தரிசனமானார் அப்பொழுது இயேசு பேதுருவை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா? என்றார். அதற்கு அவன் : ஆம் ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்

என்றான். அவர்: என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்பாயாக என்றார். (யோவான் 21:15)

இவ்வாறு மூன்று முறை இயேசு பேதுருவிடம் கேட்டு என் ஆடுகளை மேய்ப்பாயாக என்று சொல்லி, காத்திருக்கச் செய்து பரிசுத்த ஆவியால் நிரப்பி அவனுக்குத் தன் ஊழியத்தைக் கொடுத்தார். பேதுரு யூதர்களுக்குப் பயந்து நடுங்கி அறையைப் பூட்டிக் கொண்டிருந்த பேதுரு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட பின்பு பயங்கள் நீக்கி அதே எருசலேமிலுள்ள யூதர்களுக்கு முன்பாக,

"இந்த இயேசுவைத் தேவன் எழுப்பினார், இதற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கிறோம்.

ஆகையினால் நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினா ரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவீர்கள் என்றான்.

இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து : சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள்.

பேதுரு அவர்களை நோக்கி : நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தாவியின் வரத்தைப் பெறுவீர்கள்.

அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையத்தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்". (அப்.2:32, 36-38, 41)

கல்விஅறிவு இல்லாத பேதையான, இயேசுவை மறுதலித்த பேதுருவை இயேசுகி.றிஸ்து பரிசுத்த ஆவியினால் நிரப்பி ஒரே பிரசங்கத்தில் மூவாயிரம் பேரை இரட்சிப்படையச் செய்தார். கல்விமானாகிய பவுலின் ஒரு பிரசங்கத்தில் மூவாயிரம்

பேர் இரட்சிக்கப்பட்டதாக வேதத்தில் காணவில்லை. ஆனால் பேதையான பேதுருவுக்கு இயேசு கிறிஸ்து அப்படிப்பட்ட ஊழியத்தைத் தந்திருந்தார்.

ஆ) பிலிப்புவின் ஊழியத்தைப் பாருங்கள் :

"சிதறிப்போனவர்கள் எங்குந் திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள். அப்பொழுது பிலிப்பென்பவன் சமாரியாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குப் போய், அங்கு உள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான்.

பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டுக் கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள்.

அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது.

அநேகந் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள். அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று" (அப். 8:4-8)

பட்டணத்துக்கு விடுதலையைக் கொடுத்து சந்தோஷத்தையும் கொடுக்கின்ற ஊழியத்தை கர்த்தர் பிலிப்புக்குத் தந்தார். அதேசமயத்தில் ஒரு தனிப்பட்ட மனிதனை இரட்சிக்க கர்த்தர் பிலிப்புவை அனுப்பினார்.

"எத்தியோப்பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும் அவருடைய பொக்கிஷ மெல்லாவற்றிற்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்து கொள்ளும்படி எnn nnருசலேமுக்கு வந்திருந்து;

ஊருக்குத் திரும்பிப் போகும்போது, தன் இரதத்திலே உட்கார்ந்து, ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான்.

ஆவியானவர் : நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார். (அப். 8:27-29)

பிலிப்பு ஓடிப்போய் அந்த இரதத்திலே ஏறினான். அப்பொழுது பிலிப்பு பேசத் தொடங்கி இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான்.

...அப்பொழுது அவன்: இயேசு கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி; இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள், பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்". (அப். 8:35-38)

இவ்வாறு தனிப்பட்ட மனிதனை சந்தித்து சுவிசேஷத்தை அறிவித்து இரட்சிப்புக்குள் கொண்டு வரும் ஊழியத்தையும் பிலிப்புக்கு கொடுத்தார்.

இ) பவுலுக்கு கொடுக்கப்பட்ட ஊழியத்தைப் பாருங்கள் :

"நாங்கள் ஜெபம் பண்ணுகிற இடத்துக்குப் போகையில் குறிசொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்டிருந்து, குறி சொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்பட்டாள்.

அவள் பவுலையும் எங்களையும் பின்தொடர்ந்து வந்து: இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர், இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள்.

இப்படி அநேகநாள் செய்து கொண்டு வந்தாள். பவுல் சினங்கொண்டு, திரும்பிப் பார்த்து : நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னான்; அந்நேரமே அது புறப்பட்டுப் போயிற்று". (அப். 16:16-18)

இவ்வாறு அசுத்த ஆவியை விரட்டி விடுதலையைத் தரும் நற்கிரியையின் ஊழியத்தையும் மேலும், "சிறைச்சாலைக்காரன் நித்திரை தெளிந்து, சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு, கட்டுண்டவர்கள் ஓடிப்போனார்களென்று எண்ணி, பட்டயத்தை உருவித் தன்னைக் கொலை செய்து கொள்ளப் போனான்.

பவுல் மிகுந்த சத்தமிட்டு : நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்து கொள்ளாதே; நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம் என்றான்.

அப்பொழுது அவன் தீபங்களைக் கொண்டு வரச்சொல்லி, உள்ளே ஓடி, நடுநடுங்கி, பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்து,

அவர்களை வெளியே அழைத்து வந்து, ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்றான்.

அதற்கு அவர்கள் : கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி,

அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள்.

மேலும் இராத்திரியில் அந்நேரத்திலே தானே அவன் அவர்களை அழைத்துக் கொண்டு போய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள்". (அப். 16:27-33)

இவ்வாறு சிறைச்சாலைக்காரனையும் அவனுடைய குடும்பத்தையும் இரட்சிப்புக்குள் வழிநடத்த கர்த்தர் பவுலை பயன்படுத்தினார். இது குடும்ப இரட்சிப்பின் ஊழியத்தின் அவசியத்தை வெளிப்படுத்தியது.

மேலும் கர்த்தர் பவுலின் மூலமாய் ரோமாபுரியிலுள்ள பரிசுத்தவான்களுக்கும் கொரிந்துவிலுள்ள பரிசுத்தவான் களுக்கும், கலாத்திய நாட்டிலுள்ள சபைகளுக்கும் எபேசுவிலுள்ள விசுவாசிகளுக்கும், பிலிப்பு பட்டணத்திலுள்ள பரிசுத்தவான்களுக்கும், தெசலோனிக்கே சபைகளுக்கும், கொலொசே பட்டணத்து சபைக்கும் நிருபங்களை எழுதியும், சபைகளைச் சந்தித்து சுவிசேஷத்தை அறிவித்து உபத்திரவங்கள் பாடுகள் மத்தியில் சபைகளைக் கட்டி எழுப்பும் பெரும் ஊழியத்தை தேவனாகிய கர்த்தர் பவுலுக்கு கொடுத்திருந்தார்.

இவ்வாறு ஒவ்வொரு மனிதனையும் கர்த்தர் குறித்து, அழைத்து, வழிநடத்தி, பரிசுத்த ஆவியினால் நிரப்பி, அவருடைய ஊழியத்தைத் தந்து வழிநடத்துகிறார்.

என்னுடைய வாழ்க்கையிலும் கர்த்தர் ஊழியத்தைத் தந்தார் :

1970 ஆம் ஆண்டு கல்லூரியில் பணிபுரிந்து கொண்டே ஊழியத்தைச் செய்ய கர்த்தர் எனக்கு அழைப்பு கொடுத்தார். நானோ ஆலயங்களில் நடக்கும் ஊழியங்களுக்கு உதவி செய்வதும், நற்செய்தி கூட்டங்களுக்கு உதவி செய்வதுமாயிருந்தேன். ஆனால் பிரசங்கம் செய்வது கிடையாது. **1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சகோ. அப்பாத்துரை** அவர்களோடு இணைந்து ஜெபித்தேன். அவர்கள் எனக்காக ஜெபிக்க ஆரம்பித்தவுடன் நிறுத்திவிட்டு,

"Brother கர்த்தர் உங்கள்நிமித்தம் மிகவும் துக்கமாயிருக்கிறார் என்றார். நான் ஏன் என்றேன். அதற்கு அவர் கர்த்தர் உங்களை பிரசங்கம் பண்ணச் சொல்லியும் நீங்கள் பிரசங்கம் பண்ணவில்லையா என்றார். ஆம் என்றேன். அதற்கு அவர் ஏன் என்றார்? அதற்கு நான் பிரசங்கம் பண்ணவேண்டுமென்றால் அதிகாரத்தோடும் வல்லமையோடும் பிரசங்கம் பண்ணவேண்டும். நான் பேராசிரியராயிருப்பதினால் என்னை பிரசங்கத்திற்கு அழைப்பார்கள். பேருக்காக பிரசங்கிக்க விருப்பமில்லை என்றேன்.

அப்பொழுது அவர்கள் நான் ஒரு இந்துக் குடும்பத்தில் பிறந்தவன். இப்பொழுதுதான் இயேசுவை ஏற்றுக் கொண்டேன். நான் இயேசுவுக்காய் பிரசங்கம் பண்ணுகிறேன். நீங்கள் சிறுவயதிலிருந்து இயேசுவையும் வேதத்தையும் அறிந்தவர்கள். நீங்கள் ஏன் பிரசங்கம் பண்ணக்கூடாது. நீங்களல்ல ஆவியானவரே உங்கள் மூலம் பேசுவார். உடனே நான் சரி என்றேன். அதன்பின்பு அவர்கள் ஜெபம் பண்ணி என்னை உற்சாகப்படுத்தி அனுப்பினார்கள்.

அடுத்த நாளே திருநெல்வேலி பொறியியல் கல்லூரி மாணவர்கள் தங்களுக்கென்று ஒருநாள் ஒடுக்கக் கூட்டம் (Retreat) வைத்திருக்கிறோம் அதில் நீங்கள் தான் பேசவேண்டும் என அழைத்தார்கள். நான் உடனே சரியென்று சொன்னேன். அது காலை 9 மணியிலிருந்து 4 மணி வரை நடைபெற்றது இரண்டு பிரசங்கங்கள், பாடல்கள், ஜெபவேளை, வினாடி வினா நிகழ்ச்சி எல்லாவற்றையும் நானே செய்ய வேண்டியிருந்தது. அன்றிலிருந்து இன்றுவரை எங்கெங்கே என்னை ஊழியத்திற்கு அழைக்கிறார்களோ அங்கெல்லாம் சென்று என்னால் முடிந்தவரை கர்த்தருக்கு ஊழியம் செய்கிறேன்.

அடுத்து **1996 ஆம் ஆண்டு** சகோ. **எபனேசர் பால்** அவர்கள் எனக்கு ஜெபிக்கும் பொழுது சகோதரரே கர்த்தர் உங்களை புத்தக ஊழியத்திற்கு அழைத்திருக்கிறார். நீங்கள் அவருக்கு அநேக புத்தகங்களை எழுதுகிறீர்கள் என்றார். அப்பொழுது நான் ஒரு பேராசிரியராக இருந்தாலும் ஒரு கட்டுரை கூட எழுதியது கிடையாது, கதை புத்தகம் ஒன்று கூட முழுமையாய்ப் படித்ததில்லை. அப்படிப்பட்ட எனக்கு எவ்வாறு புத்தகத்தை எழுத முடியும் என்று எண்ணினேன். என்றாலும் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து புத்தகத்தை எழுத ஆரம்பித்தேன். **தேன் துளிகள்** என்ற ஜெப புத்தகத்தை முதலாவது எழுதினேன். அதன்பின்பு படிப்படியாய் தொடர்ந்து எழுத கர்த்தர் உதவி செய்தார். **பரலோக ஞானமன்னா என்ற தினசரி தியானத்தை 10 ஆண்டுகள்** எழுதி இப்பொழுது பதினொன்றாம் மலரையும் எழுதி வெளியிட கர்த்தர் கிருபை கூர்ந்தார். தற்பொழுது இருபது புத்தகங்கள் எழுதி இருபத்தொன்றாவதாக இந்தப் புத்தகத்தை எழுத கிருபை செய்தார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

அடுத்து ஒருமுறை சகோ. **எபனேசர் பால்** அவர்கள் எனக்காக ஜெபிக்கும் பொழுது கர்த்தர் ஒரு சாவிக்கொத்தை உங்களுக்குத் தருகிறார். அதில் சில பொறுப்புள்ள ஊழியங்களை உங்களுக்குத் தந்து வழி நடத்துகிறார் என்றார். அவ்வாறே வாலிபர் மத்தியில் ஊழியங்கள், கல்லூரி மாணவர்கள் மத்தியில் ஊழியங்கள், திருச்சபையில் ஊழியங்கள், நற்செய்தி கூட்டங்கள்,

பீல்ஜாதி மக்களிடத்தில் ஊழியங்கள், வீட்டில் ஜெபக்கூட்டங்கள், மருத்துவமனை ஊழியங்கள் ஆகிய ஊழியங்களையும், மேலும் இயேசு அழைக்கிறார், ஜெபத்தொனி, ஷாலோம், இயேசு விடுவிக்கிறார் ஸ்தாபனங்களிலும் ஊழியங்களில் பங்கேற்று கர்த்தருடைய சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் கிருபை செய்திருக்கிறார்.

இந்த ஊழியங்களின் மூலமாக ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி தேவனுடைய ராஜ்யத்தைக் கட்ட தகுதியற்ற என்னை கர்த்தர் அழைத்து வழிநடத்தி என் மீது வைத்த தேவசித்தத்தை நிறைவேற்றி வருவதற்காக தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். இன்னும் கிறிஸ்துவின் சித்தத்தை அறிந்து அவருடைய பணியைச் செய்ய விரும்புகிறேன்.

பிரியமான சகோதர சகோதரியே தேவனாகிய கர்த்தர் உனக்கென்று ஊழியத்தை வைத்திருக்கிறார், அந்த ஊழியம் உனக்குப் பிடித்த அல்லது பிடிக்காத ஊழியமாயிருக்கலாம். உனக்குத் தெரிந்த அல்லது தெரியாத ஊழியமாயிருக்கலாம். அதைச் செய்வதற்கு எனக்கு தகுதியில்லை என்று எண்ணியிருக்கலாம். மற்றவர்கள் என்னை கேலி செய்வார்களே, நிந்திப்பார்களே என எண்ணலாம். ஒன்றை மாத்திரம் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.

"பின்பு : யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். அதற்கு நான் : இதோ அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும் என்றேன்". (ஏசாயா 6:8)

தேவனாகிய கர்த்தரின் ஏக்கத்தை அறிந்து ஏசாயா தீர்க்கதரிசி அடியேன் இருக்கிறேன் என்னை அனுப்பும் என்று சொன்னது போல உன் அருகாமையிலே இருக்கும் இயேசுகிறிஸ்துவிடம், தேவனே இதோ அடியேன் இருக்கிறேன் என்னை அனுப்பும் ராஜாதி ராஜாவே என்று உன்னை முழுமையாய் அர்ப்பணித்து கிறிஸ்துவின் ஊழியத்தைப் பெற்று அவர் சித்தத்தை அறிந்து செயல்படு, நீ வெற்றியான வாழ்வைக் காண்பாய்.

7. ஜெயத்தைத் தருகிற தேவன்

இவ்வுலகில் ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கையில் அனைத்திலும் வெற்றி பெற வேண்டுமென்று விரும்புகிறான். ஆனால் மனிதனால் அது முடிவதில்லை. தேவனாகிய கர்த்தர் தான் குறித்து, அழைத்து, அபிஷேகித்து, போதித்து அவருடைய சித்தத்தைச் செய்யும் பிள்ளைகள் அனைவருடைய வாழ்க்கையில் அனைத்திலும் ஜெயத்தைத் தந்து ஆசீர்வதிக்கிறார்.

"அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்" (சங்.1:3) என்ற வாக்கின்படி நடக்கிறவர்கள் வாழ்க்கையில் செய்வதெல்லாம் வாய்க்கும்.

அ) யோசேப்பின் வாழ்க்கையைப் பாருங்கள் :

அவன் தன் சகோதரர்களால் வெறுக்கப்பட்டு அந்நியருக்கு 20 காசுக்கு விற்கப்பட்டான். அவர்கள் யோசேப்பை எகிப்துக்கு அழைத்துச் சென்று போத்திபாரிடம் விற்றார்கள்.

"கர்த்தர் யோசேப்போடே இருந்தார், ...

கர்த்தர் அவனோடே இருக்கிறார் என்றும், அவன் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப் பண்ணுகிறார் என்றும், அவன் எஜமான் கண்டு;

யோசேப்பினிடத்தில் தயவு வைத்து, அவனைத் தனக்கு ஊழியக்காரனும் தன் வீட்டுக்கு விசாரணைக்காரனுமாக்கி, தனக்கு உண்டான யாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான்". (ஆதி.39:2-4)

அடுத்து அவன் கர்த்தருக்குப் பயந்து போத்திபாரின் மனைவி தவறான வழிக்கு அழைத்த போது பொல்லாப்புக்கு விலகி ஓடினான். அவன் மீது பொய்க்குற்றம் சாட்டி சிறையில் தள்ளப்பட்டான்.

"கர்த்தர் அவனோடே இருந்தபடியினாலும், அவன் எதைச் செய்தானோ அதைக் கர்த்தர் வாய்க்கப் பண்ணினபடியினாலும், அவன் வசமாயிருந்த யாதொன்றையும்

குறித்துச் சிறைச்சாலைத் தலைவன் விசாரிக்கவில்லை". (ஆதி. 39:23)

கர்த்தர் அவனை ஞானத்தினால் நிரப்பி ஒருவராலும் அர்த்தம் கூறமுடியாத பார்வோனின் சொப்பனத்திற்கு யோசேப்பு அர்த்தத்தைக் கூறினான்.

"பார்வோன் யோசேப்பை நோக்கி: தேவன் இவையெல்லாவற்றையும் உனக்கு வெளிப்படுத்தியிருக்கிறபடியால், உன்னைப் போல விவேகமும் ஞானமுமுள்ளவன் வேறொருவனும் இல்லை".

"நீ என் அரமனைக்கு அதிகாரியாயிருப்பாய்; உன் வாக்கின்படியே என் ஜனங்கள் எல்லாரும் அடங்கி நடக்கக்கடவர்கள்; சிங்காசனத்தின் மேல் மாத்திரம் உன்னிலும் நான் பெரியவனாய் இருப்பேன் என்றான்.

பின்னும் பார்வோன் யோசேப்பை நோக்கி : பார், எகிப்து தேசம் முழுமைக்கும் உன்னை அதிகாரியாக்கினேன்". (ஆதி. 41:39-41)

மேலும் "தேசமெங்கும் பஞ்சம் உண்டானபடியால், யோசேப்பு களஞ்சியங்களையெல்லாம் திறந்து, எகிப்தியருக்கு விற்றான்; பஞ்சம் எகிப்து தேசத்தில் வரவரக் கொடிதாயிற்று.

சகல தேசங்களிலும் பஞ்சம் கொடிதாயிருந்தபடியால் சகல தேசத்தார்களும், யோசேப்பினிடத்தில் தானியம் கொள்ளும்படி எகிப்துக்கு வந்தார்கள்". (ஆதி. 41:56, 57)

பஞ்சகாலத்திலும் யோசேப்பு செய்ததை கர்த்தர் வாய்க்கப் பண்ணினார். மேலும்.

யோசேப்பு தன் மூத்த 10 சகோதரர்களை பஞ்சகாலத்தில் சந்திக்க நேர்ந்தது யோசேப்பு அவர்களை இனம் கண்டு கொண்டான். அப்பொழுது,

"நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள், தேவனோ, இப்பொழுது நடந்து வருகிறபடியே, வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு, அதை நன்மையாக முடியப் பண்ணினார்".

மரணமடையும் சமயத்தில், "யோசேப்பு தன் சகோதரரை நோக்கி; நான் மரணமடையப் போகிறேன், ஆனாலும் தேவன் உங்களை நிச்சயமாய் சந்தித்து, நீங்கள் இந்த தேசத்தை விட்டு, தாம் ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் ஆணையிட்டுக் கொடுத்திருக்கிற தேசத்துக்குப்போகப் பண்ணுவார் என்று சொன்னதுமன்றி,

தேவன் உங்களை சந்திக்கும் போது, என் எலும்புகளை இவ்விடத்திலிருந்து கொண்டு போவீர்களாக என்றும் சொல்லி, யோசேப்பு இஸ்ரவேல் புத்திரரிடத்தில் ஆணையிடுவித்துக் கொண்டான்". (ஆதி. 50:20,24,25)

தேவனாகிய கர்த்தருக்கு அவன் மிகவும் பயந்து நடந்து பொல்லாப்புக்கு விலகி அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்தான். கர்த்தர் அவனை ஞானத்தின் ஆவியினால் நிரப்பி அவன் எங்கெங்கு பணி செய்தாலும் (போத்திபாரின் வீடு, சிறைச்சாலை, எகிப்து தேசத்தின் அதிபதியாய்) அங்கெல்லாம் அவன் செய்த எல்லாவற்றையும் வாய்க்கப்பண்ணி ஜெயத்தைக் கொடுத்தார். மேலும் அவன் மரண நேரத்தில் தன் சகோதரரிடம் இட்ட ஆணையையும் அவன் மரித்த பின்பு நிறைவேற்றினார். அவனுடைய எலும்புகளை மோசே சுமந்து கொண்டு சென்று யோசுவாவால் கர்த்தர் ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தில் அடக்கம் பண்ணினார்கள்.

"இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலேயிருந்து கொண்டு வந்த யோசேப்பின் எலும்புகளை அவர்கள் சீகேமிலே யாக்கோபு சீகேமின் தகப்பனாகிய எமோரியருடைய புத்திரரின் கையில் நூறு வெள்ளிக்காசுக்குக் கொண்ட நிலத்தின் பங்கிலே அடக்கம் பண்ணினார்கள்; அந்த நிலம் யோசேப்பின் புத்திரருக்கு சுதந்தரமாயிற்று". (யோசுவா 24:32)

ஆ) தானியேலின் வாழ்க்கையைப் பாருங்கள் :

பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் எருசலேமை முற்றுகையிட்டு அங்கிருந்த சிறந்தவர்களையும் சில வாலிபர்களையும் சிறைபிடித்துச் சென்றான். அவர்களுக்கு கல்தேயரின் எழுத்தையும் பாஷையையும் கற்றுக் கொடுக்க பிரதானிகளின் தலைவனுக்கு கட்டளையிட்டான்.

அப்பொழுது, "தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும் அவர் பானம் பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக் கொண்டு, தன்னை தீட்டுப்படுத்தாதபடி பிரதானிகளின் தலைவனிடத்தில் வேண்டிக் கொண்டான்.

பத்துநாள் வரைக்கும் உமது அடியாரைச் சோதித்துப் பாரும்; எங்களுக்குப் புசிக்கப் பருப்பு. முதலான மரக்கறிகளையும், குடிக்கத் தண்ணீரையும் கொடுத்து,

எங்கள் முகங்களையும் ராஜபோஜனத்தில் புசிக்கிற வாலிபருடைய முகங்களையும் ஒத்துப் பாரும், பின்பு நீர் காண்கிறபடி உமது அடியாருக்குச் செய்யும் என்றான்.

அவன் இந்தக் காரியத்திலே அவர்களுக்குச் செவி கொடுத்து, பத்து நாளளவும் அவர்களைச் சோதித்துப் பார்த்தான்

பத்துநாள் சென்றபின்பு, ராஜபோஜனத்தைப் புசித்த எல்லா வாலிபரைப் பார்க்கிலும் அவர்கள் முகம் களையுள்ளதாயும், சரீரம் புஷ்டியுள்ளதாயும் காணப்பட்டது". (தானி. 1:8,12-15)

தானியேல் தன் சரீரத்தை தீட்டுப்படுத்தாதபடி எடுத்த தீர்மானத்தில் கர்த்தர் வெற்றியைத் தந்து தன்னை சோதித்துப் பார்க்கச் சொல்லி அதிலும் ஜெயத்தைப் பெறச் செய்தார். கர்த்தர் அவனுக்கு ஞானத்தையும் அறிவையும் சமர்த்தியத்தையும் தந்தார்.

மேலும் நேபுகாத்நேச்சார் சொப்பனங் கண்டதில் கலங்கிப் போனான். அதன் அர்த்தத்தைத் தெரிவிக்க அத்தேசத்தில் ஒரு ஜோசியனோ அல்லது ஞானியோ இல்லை. ஆகவே ராஜா பாபிலோனிலுள்ள எல்லா ஞானிகளையும் கொலைசெய்யக் கட்டளையிட்டான். அப்பொழுது, "தானியேல் ராஜாவினிடத்தில் போய்,

சொப்பனத்தின் அர்த்தத்தை ராஜாவுக்குக் காண்பிக்கும்படித் தனக்குத் தவணை கொடுக்க விண்ணப்பம் பண்ணினான்".

“பின்பு தானியேல் தன் வீட்டுக்குப் போய் தானும் தன் தோழரும் பாபிலோனின் மற்ற ஞானிகளோடேகூட அழியாத படிக்கு இந்த மறைபொருளைக் குறித்துப் பரலோகத்தின் தேவனை நோக்கி இரக்கம் கேட்கிறதற்காக,

அனனியா, மீஷாவேல், அசரியா என்னும் தன்னுடைய தோழருக்கு இந்தக் காரியத்தை அறிவித்தான்.

பின்பு இராக்காலத்தில் தரிசனத்திலே தானியேலுக்கு மறைபொருள் வெளிப்படுத்தப்பட்டது. அப்பொழுது தானியேல் பரலோகத்தின் தேவனை ஸ்தோத்தரித்தான்”. (தானி. 2:17-19)

பின்பு தானியேல் நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்தையும் அதின் அர்த்தத்தையும் தெளிவாய்க் கூறினான். பின்பு ராஜா தானியேலை பெரியவனாக்கி பாபிலோனிலுள்ள சகல ஞானிகளின் மேலும் பிரதான அதிகாரியாக நியமித்தான். அவன் நண்பர்கள் மூன்று பேருக்கும் உயர்வைத் தந்தான்.

தானியேல் கர்த்தருக்குப் பயந்து அவரை நோக்கி விண்ணப்பித்துக் கேட்டதால் கர்த்தர் அவனுக்கு ஜெயத்தைக் கொடுத்து அனைத்து ஞானிகளும் கொலைசெய்யப்படாதபடிக் காத்தார்.

தரியுராஜாவின் ஆணையை மீறி தானியேல் கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணியதால் சிங்கக் கெபியில் போடப்பட்டான். கர்த்தரோ ஒரு தூதனை அனுப்பி சிங்கங்களின் வாய்யக் கட்டிப்போட்டு அவனுக்குத் தீங்கு வராமல் காத்தார். மேலும் தானியேலின் தேவனே ஜீவனுள்ள தேவன் என்று ஆணையிட்டான்.

மேலும் “தரியுவின் ராஜ்யபார காலத்திலும், பெர்சியனாகிய கோரேசுடைய ராஜ்யபார காலத்திலும் தானியேலின் காரியம் ஜெயமாயிருந்தது”. (தானி. 6:28)

ஆகவே தேவனாகிய கர்த்தர் தானியேல் வாழ்க்கை முழுவதிலும் அவன் செய்த காரியங்களை வாய்க்கப்பண்ணி ஜெயத்தைத் தந்தார்.

இ) பேதுருவின் வாழ்க்கையைப் பாருங்கள் :

தேவனாகிய கர்த்தர் பேதுருவை பரிசுத்த ஆவியினால் நிரப்பிய பின்பு இயேசுவே கிறிஸ்து என்று சுவிசேஷத்தை அறிவித்தான்.

"வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தார்கள்; அவர்கள் தொகை ஏறக்குறைய ஐயாயிரமாயிருந்தது". (அப். 4:4)

ஒரே பிரசங்கத்தில் ஐயாயிரம் பேர் இரட்சிக்கப்பட்டார்கள். "பிணியாளிகளைப் படுக்கைகளின் மேலும் கட்டில்களின் மேலும் கிடத்தி, பேதுரு நடந்து போகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர் மேல் படும்படிக்கு, அவர்களை வெளியே வீதிகளில் கொண்டு வந்து வைத்தார்கள்".

சுற்றுப்பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர் களையும் எருசலேமுக்குக் கொண்டு வந்தார்கள். அவர்கனெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள்". (அப். 5:15,16)

மேலும் கொர்நெலியு தன் உறவின் முறையார் அனைவரையும் தன்னுடைய விசேஷித்த சிநேகிதர்களையும் வரவழைத்து காத்திருந்தான். பேதுரு உள்ளே நுழைந்து கிறிஸ்து இயேசுவின் சுவிசேஷத்தை அறிவித்தான். "இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக் கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்".

"அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும் தேவனைப்புகழுகிறதையும்,

பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும் போது, பரிசுத்த ஆவியின் வரம் புறஜாதிகள் மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்துப் பிரமித்தார்கள். (அப்.10:44-46)

மேற்சொன்ன வசனங்களைப் பாருங்கள். பேதுரு பேசும்பொழுது ஆயிரக்கணக்காய் இரட்சிக்கப்பட்டார்கள். அவனிடம் கொண்டு வந்த அனைத்து வியாதியஸ்தர்களும்,

திமிர்வாதக்காரர்களும் குணமாக்கப்பட்டார்கள். அசுத்த ஆவி பிடித்தவர்கள் விடுதலையாக்கப்பட்டார்கள். இதுமாத்திரமல்ல மரித்தவர்களை எழுப்பினான், சப்பாணியை எழுந்து நடக்கப் பண்ணினான். புறஜாதியார் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றார்கள். கிறிஸ்து இயேசுவின் செயல்படி அவன் செய்ய ஆரம்பித்தபோது இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே அவன் செய்த யாவையும் வாய்க்கப்பண்ணி ஜெயத்தைக் கொடுத்தார்.

௯) பவுலின் வாழ்க்கையைப் பாருங்கள் :

அவன் பரிசுத்த ஆவியினால் நிரம்பியபின் பாடுகளின் மத்தியில் பட்டணம் பட்டணமாய்ச் சென்று கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவித்து சபைகளைக் கட்டி எழுப்பினான். அவன் சரீரத்தின் வேதனையைப் பாருங்கள்.

"... என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது, என்னை நான் உயர்த்தாதபடிக்கு அது என்னைக் குட்டும் சாத்தானின் தூதனாயிருக்கிறது".

"அது என்னை விட்டு நீங்கும்படிக்கு நான் மூன்று தரம் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொண்டேன்".

"அதற்கு அவர், என் கிருபை உனக்குப் போதும் பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன்".

அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும் போதே பலமுள்ளவனாயிருக்கிறேன், ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்". (2கொரி. 12:7-10)

பவுலின் சரீரத்தில் இருந்த பலவீனத்துக்காக பவுல் இயேசுகிறிஸ்துவிடம் மூன்று தரம் வேண்டுதல் செய்தும் அது நீங்கவில்லை. ஆனால் இயேசு கிருபையின் வல்லமையை அனுப்பி அவனை பலப்படுத்தி எல்லாவற்றையும் கிறிஸ்துவுக்காக செயல்பட வைத்தார். பலவீனத்திலும் அவன்

கிறிஸ்துவின் வல்லமை மூலமாய் கிறிஸ்துவின் ஜெயத்தைத் தரித்தவனாயிருந்தான்.

ஆகவேதான் பவுல், "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்". இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்". (2 தீமோ. 4:7,8)

இயேசு கிறிஸ்து அவன் வாழ்க்கை முழுவதும் ஜெயத்தைக் கொடுத்தபடியினால் அவ்வாறு அவனால் கூற முடிந்தது. அதுமாத்திரமல்ல

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (1 கொரி. 15:57) என்று வெற்றி முரசோடு துதித்தான். தேவனாகிய கிறிஸ்துவுக்கே மகிமையுண்டாவதாக. அல்லேலூயா.

என் வாழ்க்கையில் ஜெயங் கொடுத்த கிறிஸ்துவைப் பாருங்கள் :

என் வாழ்க்கை வெற்றியாய் அமைவதற்கு காரணம் இயேசுகிறிஸ்துவே. கிறிஸ்து என்னை ஆட்கொள்ளவில்லையென்றால் இவ்வுலகம் தரக்கூடாத சமாதானத்தையும் சந்தோஷத்தையும் இவ்வுலக வாழ்க்கையின் மனநிறைவும் நித்திய ராஜ்யத்தின் பங்கின் நிச்சயத்தையும் பெற்றிருக்க முடியாது.

சிறு வயதிலிருந்து கிறிஸ்தவ பாரம்பரியத்தில் வளர்க்கப்பட்டாலும் உலக ஆசையும், ஜீவனத்தின் பெருமையும், மாம்சத்தின் இச்சையும் என்னை ஆட்கொண்டிருந்தது. என் பெற்றோருடைய ஜெபம் தேவ சமுகத்தை விட்டு விலகி ஓடாதபடி காத்தது. ஆகவேதான் எனது இளம் வயதிலிருந்து கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் பாவங்கள் செய்யும் பொழுது அச்சுறுத்திக் கொண்டிருந்தது.

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் தேவசித்தத்தின்படி கல்லூரியில் விரிவுரையாளராக பணியில்

சேர்ந்தேன். ஓராண்டு சிவகாசியிலுள்ள. A.J. College லும் பின்பு **35 ஆண்டுகள் நாசரேத் மர்காஷிஸ் கல்லூரியிலும்** கர்த்தர் பணிபுரியச் செய்தார். என் பணியின் வெற்றிக்குக் காரணம் இயேசுகிறிஸ்துவே. ஆரம்ப காலத்தில் கிறிஸ்துவை விட்டு விலகி வாழ்ந்தாலும், இரட்சிக்கப்பட்ட பின்பு கிறிஸ்துவைச் சார்ந்து வாழ்ந்ததால் கர்த்தரின் பணியை வெற்றியாக ஆக்கித் தந்தார். குறித்த நேரத்தில் செல்லவும் பாடங்களைக் கருத்தாய்ப் போதிக்கவும் மாணவர்களை கிறிஸ்துவின் பாதையில் வழிநடத்தவும் கர்த்தர் குறித்த பணியின் காலத்தை அவருடைய கிருபையின் ஆரோக்கியத்தினால் முடிக்கவும் முடிந்தது. இயேசு கிறிஸ்து எனக்கு முன்னின்று வழிநடத்தியதால் மாத்திரமே அவர் தந்த உலக பணியை வெற்றியாய் முடித்து ஓய்வுபெற முடிந்தது. கர்த்தருடைய கிருபையினால் நல்ல ரிசல்ட்டைப் பெறவும் இறுதிக்காலத்தில் ஒரே ஆண்டில் பல்கலைக்கழக தரப்பட்டியலில் (Rank) ஒரே வகுப்பில் ஐந்துபேரை தந்து என்னையும் என் துறையைச் சார்ந்தவர்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். எல்லாவற்றிற்கும் மேலாக அநேக மாணவ மாணவிகளை கர்த்தருக்குள் வழிநடத்தவும், சிலரை போதகர்களாக்கவும் கிறிஸ்தவரல்லாத மாணவர்களிடையே கர்த்தர் அதிசயங்களைச் செய்து அவருடைய வல்லமையை வெளிப்படுத்தினார்.

மேலும் நான் ஏறத்தாள 30 ஆண்டுகளுக்கு மேலாக பாளையங்கோட்டையிலிருந்து நாசரேத்துக்கு அனுதினமும் சென்று வந்தாலும் கர்த்தர் பாதுகாத்து ஆசீர்வதித்தார். பாளையங்கோட்டையில் உள்ள ஒரு கல்லூரியில் பல சமயங்களில் என் பதவிக்கு ஏற்ற இடம் காலியாக (Vacant) இருந்தாலும் எனக்கு இடம் மாறுதல் கிடைக்கவில்லை. அதற்காக ஒருநாள் கூட கவலைப்படாதபடி என்னை கர்த்தர் காத்து வழிநடத்தினார்.

மேலும் நெல்லை திருமண்டலத்தில் அநேக சபைகளில் கர்த்தருடைய வார்த்தையை அறிவிக்க கர்த்தர் கிருபை கூர்ந்தார். பல ஆண்டுகளாய் அலைந்து திரிந்து பணிசெய்தாலும் ஒருவரும் குறைசொல்லாதபடி கர்த்தர் காத்து, குறைவுகளை நிறைவாக்கி பணியை வெற்றியாக்கித் தந்தார்.

அடுத்து குடும்ப வாழ்க்கையில் கிறிஸ்து எனக்கு வெற்றியைத் தந்தார்.

"மனைவியை கண்டடைகிறவன் நன்மையானதை கண்டடைகிறான்; கர்த்தரால் தயையும் பெற்றுக் கொள்ளுகிறான்". (நீதி. 18:22)

"உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக் கொடியைப் போலிருப்பாள்". (சங். 128:3)

"சிறுமையானவர்களுக்கு தன் கையைத் திறந்து, ஏழைகளுக்கு தன் கரங்களை நீட்டுகிறாள்". (நீதி. 31:20)

இந்த வேதவசனங்களின் படி கர்த்தர் நன்மைகளை கண்டடையத்தக்கதாக அருமையான திருமதி. **Dr. பிரேமா கிறிஸ்டோபரை** மனைவியாக **1973ஆம் ஆண்டு மார்ச் 5ஆம் தேதி** தந்தார். என் மனைவி மருத்துவராயிருப்பதினால் என்னுடைய பெற்றோர்கள், பிள்ளைகள், குடும்பத்தின் உறவினர்கள், நண்பர்கள், விசுவாசிகள், ஏழைகள் அனைவருக்கும் கர்த்தர் கிருபையாய்த் தந்த மருத்துவ தாலந்தினால் உதவிகளைச் செய்து இயேசுவின் அன்பையும் அவருடைய வல்லமையையும், குணமாக்குதலையும் வெளிப்படுத்தினார்.

மேலும் கர்த்தர் **1975ஆம் ஆண்டு** என் மூத்த மகள் **C.லாவண்யா, 1977 ஆம் ஆண்டு** எனது இளைய மகள் **C.சுகன்யா**வையும் எங்களுக்குத் தந்து ஆசீர்வதித்தார். இக்காலத்தில் பெண்பிள்ளைகள் பெரும் சுமை என்று எண்ணுகிற உலகில் இரண்டு பெண் பிள்ளைகளையும் எங்களுக்கு கர்த்தரின் ஆசீர்வாதங்களாகவே தந்திருக்கிறார். தேவன் இருவருக்கும் கர்த்தருடைய சித்தத்தின்படி திருமணங்களை நடத்தி மூத்த மகளுக்கு பெண் குழந்தையையும் இளைய மகளுக்கு ஆண் குழந்தையையும் கொடுத்து ஆசீர்வதித்திருக்கிறார்.

"உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும்" (ஏசா. 54:13) என்ற வசனத்தின்படி என் இரண்டு பிள்ளைகளையும், இரண்டு மருமகன்களையும், இரண்டு பேரப்பிள்ளைகளையும் கர்த்தரின் ஆசீர்வாதங்களாக வாழச்

செய்கிறார். அவர்களைப் போதித்து நடத்துகிறார். அவருடைய சமாதானத்தை எனக்குப் பெரிதாக்கியிருக்கிறார். ஆகவே இதற்குக் காரணம் அனைத்தையும் இயேசு கிறிஸ்துவின் சித்தத்தின்படி செய்ய ஒப்புக் கொடுத்து அவருடைய வழிநடத்துதலை தெரிந்து செயல்படும் பொழுது உபத்திரவங்கள் மத்தியிலும் கர்த்தர் வெற்றியைத் தந்து ஆசீர்வதிக்கிறார்.

அடுத்து கிறிஸ்தவ ஜீவியத்தில் கர்த்தர் என்னை வழிநடத்தியது வெற்றியூான வாழ்க்கை அமைத்துத் தந்தது. நான் முன்பு கூறியது போல வாலிப காலத்தில் நான் பாவச் சேற்றில் உழன்று வந்தேன். பணஆசை, பொருளாசை சிற்றின்பம், பெருமை, கோபம், கெட்டவார்த்தை பேசுவது போன்ற பொல்லாத பாவங்களில் சிக்குண்டு கிடந்தேன். கர்த்தர் **1976 ஆம் ஆண்டு என் பாவங்களை உணர்த்தினார்.** அதற்காக மிகவும் மனங்கசந்து அழுதேன். இயேசுவிடம் அறிக்கையிட்டேன். அவர் என்னை அவருடைய இரத்தத்தினால் கழுவி பரிசுத்தப்படுத்த வேண்டுதல் செய்தேன். அன்றிலிருந்து **எனக்கு புதிய வாழ்வு ஏற்பட்டது.** கெட்டவார்த்தைகள் பேசுவதையும் மற்ற பாவங்களையும் கர்த்தர் என்னை விட்டகலச் செய்தார்.

என்னை இரட்சிப்புக்குள் வழிநடத்தியதில் என் அக்காள் திருமதி.**C. ராணி தங்கரத்தினம்**, என்னுடைய அத்தான் திரு. **S.தங்கரத்தினம்** அவர்களின் பங்கு மிகவும் பெரியது. அக்காலத்தில் ஆவிக்குரிய வாழ்க்கையில் என் அத்தான் அவர்கள் அதிக பாரத்தோடு வழிநடத்தினார்கள். என் பாவங்களை இயேசு கிறிஸ்துவோடு சிலுவையில் அறைந்து அவரோடு அடக்கம் செய்யப்பட்டு அவர் உயிர்த்தெழுந்த சாயலை தரித்தது போல அவரோடு உடன்படிக்கை பண்ணி அவருக்குள் நிலைத்து நிற்க கர்த்தர் கிருபை புரிந்தார்.

மேலும் கர்த்தர் என்னை விசுவாசத்திற்குள் வழிநடத்திய விதம் அருமையானது. நான் படிக்கும் பொழுது எனது பாட்டி திருமதி. **லீதியாள்** எனக்காக எப்பொழுதும் ஜெபித்துக் கொண்டிருப்பார்கள். படிக்கும் பொழுதும் என் அருகாமையிலே இருப்பார்கள். வயதான காலத்தில் நான் M.A. படிக்கும் வரை

பாட்டியம்மா நான் தேர்வு எழுதப் போகிறேன் எனக்காக ஜெபியுங்கள் என்று சொல்லி சென்று விடுவேன். அவர்கள் மூன்று மணி நேரமும் எனக்காகவும் தேர்வுக்காகவும் ஜெபித்துக் கொண்டேயிருப்பார்கள். அவர்கள் விசுவாசமுள்ள ஜெபம் எனக்கு படிப்பிலெல்லாம் வெற்றியைத் தந்தது.

நான் ஊழியம் செய்யும் பொழுது என் தாயாருக்கு ஏழுமுறை மாரடைப்பு வந்தது. ஒவ்வொரு முறையும் திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் (I.C.C.U) வில் சேர்த்தோம். நானும் என் மனைவியும் அருகாமையில் இருந்து ஞாயிறுக்கிழமை காலை வந்தவுடன் கண்ணைத் திறந்து என்னிடம், "நீ பிரசங்கம் பண்ண போகலையா? சீக்கிரம் போ. அம்மா உயிரோடே நான் இருப்பேன். இல்லையென்றால் கவலைப்படாதே நான் கர்த்தரோடு இருப்பேன். அங்கே நீ பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லி என்னை பிரசங்கம் செய்ய அனுப்பி விடுவார்கள்.

தேவனாகிய கர்த்தர் என் பாட்டியம்மா மூலம் என் தாயார் மூலம் எனக்கு விசுவாசத்தை ஊட்டி சோதனை நேரங்களில், இக்கட்டு நேரங்களில் விசுவாசத்தோடு ஜெபிக்கவும், கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்து கொள்ளவும் கிறிஸ்து எனக்கு போதித்து வழிநடத்தினார்.

மேலும் என்னுடைய தகப்பனார் திரு. C. சாமுவேல் செல்லையா அவர்கள் மூலம் இயேசுவினுடைய அன்பு, மனதுருக்கம், பொறுமை ஆகியவற்றையும் போதித்தார். என் தந்தை ஏழைகள், குற்றவாளிகள், பிச்சைக்காரர்கள், குஷ்டரோகிகள் மத்தியில் ஊழியம் செய்து பராமரிப்பற்ற பிச்சைக்காரர்களுக்கு ஆகாரத்தைக் கொடுத்து மருத்துவ உதவி செய்து, அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்து வந்தபோது அவர்களை அடக்கம் பண்ண அதிக உதவிகளைச் செய்தார். அவர்களைப் போல என்னால் செய்ய முடியாவிட்டாலும் அதில் ஒரு சிறு பங்கை கர்த்தர் எனக்குக் கற்றுக் கொடுத்து அதை கடைபிடிக்கச் செய்தார். ஆகவே இன்று ராஜஸ்தான், குஜராத், மத்திய பிரதேசத்திலுள்ள வாலோரம் நிலைமையிலுள்ள பீல் ஜாதி மக்களிடையே கிறிஸ்துவின் பணியைச் செய்வதற்கு எனக்கு அது மிகவும் உதவியாயிருக்கிறது.

முன்பு குறிப்பிட்டது போல கர்த்தர் என்னை அழைத்து சில ஊழியங்களைத் தந்தார். அதை அவருடைய சித்தத்தின்படி செய்ய கிருபை செய்துள்ளார். நானும் என் மனைவியும் சகோதரி. திருமதி. **தீபா செண்பகராமன்** அவர்களுடன் இணைந்து ஜெபித்தோம். சகோதரி **தீபா** அவர்கள் எனக்காக ஜெபிக்கும் பொழுது, கர்த்தர் அவர்கள் மூலமாய் **"கிறிஸ்துவே என் வாழ்க்கையின் வெற்றி"** என்ற புத்தகத்தை எழுத கூறினார். அவருடைய வார்த்தைக்கு நான் கீழ்ப்படிந்து நான் இப்புத்தகத்தை எழுதுகிறேன். சற்று தாமதமாய் நான் எழுதியதற்காக கர்த்தரிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டு இப்புத்தகத்தை துரிதமாய் எழுதி அவருடைய சித்தத்தை நிறைவேற்றி முடிக்கிறேன். மேலும் என் மீது அவர் வைத்திருக்கிற திட்டத்தை தாமதமின்றி நிறைவேற்றி முடிக்க வாஞ்சிக்கிறேன்.

இவ்வாண்டில்கூட வயோதிபர்களிடம் நான் எப்படி இருக்க வேண்டுமென்று போதித்தார். என் மனைவியினுடைய சித்தி Miss. **கிரேஸ் மாசில்லாமணி** (வயது 83) அவர்களை ஏறத்தாள கடைசி மூன்று ஆண்டுகள் எங்களோடு வைத்து பராமரிக்க அருள்புரிந்தார். வயோதிப என்னுடைய பெற்றோர்களை எங்களோடு வைத்து கடைசி வரை பராமரித்த தேவன் என் Aunty அவர்களையும் வைத்துப் பராமரிக்கச் செய்தார். அவர்கள் மூலம் உத்தமமான சிந்தை, ஆலயவாஞ்சை, கபடற்றத்தன்மை, இயேசுவின் அன்பு, இரக்கம் அனைத்தையும் காண்பித்து போதித்தார். கடைசி நேரத்தில் நான் கர்த்தரை நோக்கி இயேசுவே என் Aunty யை பராமரிப்பதில் ஒருநாள் கூட சலிப்பில்லாமல் வழிநடத்தும் என்று வேண்டுதல் செய்தேன். கிறிஸ்து அவ்வாறே செய்து வெற்றியாய் வழிநடத்தினார். நானும் என் மனைவியும் Dr.**அன்புராஜன்** அவர்களும் இணைந்து ஜெபித்தோம். அப்பொழுது Dr. **அன்புராஜன்** அவர்கள் இயேசுவே அவர்களின் ஆவியை நீர் ஏற்றுக் கொள்ளும் என்று ஜெபித்தபோது அவர்களுடைய ஆவி சரீரத்தை விட்டுப் பிரிவதைக் கர்த்தர் காண்பித்தார். எத்தனை மகிழ்ச்சி! எத்தனை இன்பம்! கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக!

பிரியமான சகோதர சகோதரியே உன் வாழ்க்கை வெற்றியாய் அமைய வேண்டுமா கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்

கொண்டு அவருடைய சித்தத்தின்படி செயல்படுத்து. உலக அறிவு, உலக ஞானம், அதிகாரம், அந்தஸ்து, பணம், நண்பர்கள் இவைகளை முன்வைத்து என் வாழ்க்கையில் உயர்வைப் பெற முயற்சித்தேன். உலகஆசையும் இன்பங்கள் உலகசிநேகம் இன்பத்தைத் தரும் என்று எண்ணி நடந்தேன். அனைத்திலும் தோல்வியைக் கண்டேன் என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டு, அவர் முன் குறித்ததை விசுவாசித்து, அழைப்பைத் தெரிந்து, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை நாடி அவருடைய வழிநடத்துதல்களுக்கு என்னை ஒப்புக்கொடுத்து, புடமிட்டுப் பார்க்க இடங்கொடுத்து, எல்லாவற்றிலும் தேவ சித்தத்தை அறிந்து (படிப்பு, வேலை, திருமணம், வீடு, குடியிருப்பு, வாகனம், ஊழியங்கள், குடும்ப வாழ்க்கை) அனைத்திலும் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலால் செயல்படுத்தவும், பரலோகத்தின் நிச்சயத்தையும் தந்து கிருபையினால் இம்மட்டும் நடத்திவருகிறார். எஞ்சிய காலங்களிலும் நான் கர்த்தருக்குப் பிரியமானதையே செய்து என்மீது அவர் வைத்துள்ள அனைத்து சித்தத்தையும் நிறைவேற்ற கர்த்தர் அவருடைய ஆவியினால் என்னை இடைகட்டி பூரணப்படுத்தவும் அவர் மந்தையில் சேர்ந்து வாழ்வதையுமே வாஞ்சிக்கிறேன். கர்த்தருடைய கிருபையும், அவருடைய மகா பெரிய இரக்கமும் தயவும் என்னையும் எங்கள் சந்ததிகளையும் ஆட்கொண்டு வழிநடத்தி அவர் சித்தத்தை மாத்திரம் செய்ய வேண்டுதல் செய்யுங்கள்.

எனக்கு அன்பானவர்களே! நீங்கள் உங்கள் வாழ்க்கையில் நிலையான வெற்றியை அடைய கிறிஸ்துவின் இரட்சிப்பைப் பெற்று அவரையே முன்வைத்து, அவர் அழைப்பை நாடி, பரிசுத்த ஆவியை வாஞ்சித்து, அவருடைய வழிநடத்துதலுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் மீது அவர் வைக்கின்ற ஊழியத்தை அவர் சித்தப்படி நிறைவேற்றுங்கள். அப்பொழுது கிறிஸ்துவே உங்கள் வாழ்க்கையின் வெற்றியாயிருப்பார்.

நீங்களும், “ஜெயம் கொடுக்கும் தேவனுக்கு கோடி கோடி ஸ்தோத்திரம்” என்ற வெற்றிக் கீதம் பாடி கர்த்தரையே மகிமைப்படுத்துவீர்கள். அல்லேலூயா!